www.padippakam.com


# புதிய சமதர்மம்

පුදිය සමධර්ම්

PUTHIYA SAMADHARMAM

இதழ் - 27 விலை : ரூபா 10.00 ஏப்ரல் 2000


உள்ளே...



சருகாக்கப்படும் இளம் குருத்து 03


கிறிக்கற் போட்டிகளும் வன்முறைகளும் 05


தேசத் துரோகம் 07


நுரைச்சோலை அனல் மின்னிலையத் திட்டம் 08


இயமனான மதநம்பிக்கை 09


## தெற்கில் எப்பாவெல பொஸ்பேட் விற்பனைக்கு எதிராக...

## வடக்கில் சமாதானத்தை வலியுறுத்தி...

## கிழக்கில் விமான நிலைய விஸ்தரிப்புக்கு எதிராக...






நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன. எங்கு பார்த்தாலும் மக்கள் பேரணிகளை நடத்துகின்றனர். 1994ல் ஆர்பரித்து எழுந்த வெகுஜன போராட்ட அலையே சந்திரிகாவை பதவியில் அமர்த்தியது. அதேபோன்ற அலை மீண்டும் சந்திரிகாவை பதவியில் இருந்து விரட்டும் நிலை இன்று தோன்றியுள்ளது.

கடந்த 30-3-2000 ம் தேதி அன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக மிகப் பெரியதொரு போராட்டம் நடந்தேறியது. எப்பாவெல பகுதியில் உள்ள பொஸ்பேட் வளங்களை மக்றோ வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்கக்கூடாது என்பதை வலியுறுத்தியே, மேற்படி போராட்டம் நடைபெற்றது. இப்பேரணியில் 10,000 மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர், தொழிலாளர்களும், ஏழை விவசாயிகளும் மதத் தலைவர்களுமே இப் போராட்டத்தில் அதிகமாக பங்கெடுத்தனர். சிங்கள, பௌத்த பேரினவாத நஞ்சைகக்கும் நச்சுப் பாம்பான சம்பிக ரணவக்கேயும் சிறு குழுவுடன் வந்து இனவாத சுலோகத்தை முன் வைத்தார். வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் சம்பிகாவை தாக்க முற்பட்ட போது போராட்ட தலைவர்கள் தலையிட்டு சம்பிகாவை காப்பாற்றி அனுப்பினர்.

(தொடர்ச்சி பக்கம் 06)

# நாடெங்கும் போராட்ட அலைகள்

படிப்பகம்

www.padippakam.com





# 12,000 முஸ்லிம் மாணவர் கல்வி பாழ்!

வடக்கில் இருந்து வெளியேறி புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் முஸ்லீம் மக்கள் பல்வேறுபட்ட துயரங்களை அனுபவிக்கின்றனர். வசதி படைத்த முஸ்லீம்கள் தங்களுக்கு உரிய வசதிகளை தாங்களே தேடிக் கொண்டனர். ஏழை முஸ்லீம்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மக்கள் இன்றும் அகதிகளாக புத்தளம் மாவட்டத்தில் பல்வேறு முகாம்களில் வாடுகின்றனர்.

முன்னர் வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட 70,000 முஸ்லீம்களே புத்தளம் மாவட்டத்தில் உள்ளனர். இவர்களின் 12,000 குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள 53 பாடசாலைகளிலேயே இம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாடசாலைகளில் 600 மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. அரசுடன், ஒட்டி இருக்கும் முஸ்லீம் தலைவர்கள், முஸ்லீம் மக்களின் நாளாந்த வாழ்க்கையுடன், சம்பந்தப்படாத விடயங்கள் பற்றியே பேசுகின்றனர். இம்மக்களின் குறைகளைப் பற்றி பெரிதாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

# அரச வங்கிகள் தனியார் மயமாகின்றன

இன்று நாட்டில் மூன்றுவிதமான வங்கிகள் உள்ளன, அரச வங்கிகள், தனியார் வங்கிகள், அரசும், தனியாரும் இணைந்து நடத்தும் வங்கிகள், இலங்கையைப் பொறுத்தவரையில் அரச வங்கிகளே மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றவையாக விளங்கி வந்தன.

இன்று தனியார் மயப்படுத்தல் துரித கெதியில் நடைபெற்று வருகின்றது. தனியார் மயத்தை வேகமாக நடைமுறைப்படுத்துவதால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் பெரு மதிப்பு நிலவுகிறது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் செயற்திட்டங்களை இலங்கை மிகக் கரிசனையுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதனால் இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள், ஊழல்கள், அதிகார துஸ்பிரயோகங்கள் லஞ்ச நடவடிக்கைகள் என்பன மேற்குலக நாடுகளினதும், அமெரிக்காவினதும், செய்தி ஊடகங்களால் கூட மறைக்கப்படுகின்றன. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வர்த்தக அமைப்பினதும், திட்டங்களை கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றிய இந்தனோசியா இன்று சுடுகாடாகியுள்ளது. வெட்டும் இடங்கள் எல்லாம் மண்டை ஓடுகளே காணப்படுகின்றன. கிழக்கு திமோர் நிலையைக் கண்டு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனனே கண்ணீர் வடித்துள்ளார்,

வங்கிகள் தனியார் மயப்படுத்தப்பட்டால், முதலில் பாதிக்கப்படப் போவது கிராமிய பொருளாதாரமாகும். அரசாங்கத்தினால் கிராமங்களில் நிறுவப்பட்ட வங்கிகள், இலாப நோக்கம் என்பதைவிட சேவை நோக்கம் கொண்டதாகவே காணப்பட்டன. இலாபமே உயிர் என இருக்கும் தனியார் துறையினர் கிராமங்கள் தோறும் வங்கிகளை நிறுவ முன்வருவார்களா என்பது சந்தேகமே, நகரப்புறங்களில் இயங்கும் அரச வங்கிகள் கூட மக்களுக்கு பல சேவைகளை செய்து வருகின்றன. இத்தகைய சேவைகளை தனியார் வங்கிகள் செய்ய முன்வருமா என்பது சந்தேகமே,

தனியார் வங்கிகளில் கடமையாற்றும் போது, வங்கித் தொழிலாளர் பல்வேறுபட்ட பேராபத்துக்களை சந்திக்க வேண்டி வரப் போகிறது. தொழிற்சங்க உரிமை முற்றாக இல்லாது போகும். ஓய்வூதியத்திட்டம் இரத்தாகும். தொழிலாளர்களை இயந்திரமாகப் பாவித்து பெருமளவு இலாபத்தை ஈட்டவே. தனியார் வங்கிகள் முயற்சி செய்யப் போகின்றன. வங்கித்துறையில் கடமைபுரியும் ஏராளமான பணியாளர்கள் இடைநிறுத்தப்படுவார்கள். உதாரணமாக தற்போது 13,000 ஆக இருக்கும் தொழிலாளர்கள் 2020ல் 500 பேர் அளவில் மட்டுமே கடமை புரிவார்கள்.

இதுவரை காலமும் அரச வங்கிகளின் இலாபங்கள் அபிவிருத்தி திட்டங்களுக்கே சென்றன. தனியார் வங்கிகள் உழைக்கும் இலாபங்கள் அந்நிய நாடுகளுக்கே செல்லப்போகின்றன.

நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் பெரிய அளவில் அதிகரிக்கப் போகின்றது. இந்த நாட்டில் வேலை இல்லாதோர் எண்ணிக்கை உச்சநிலையில் இருந்த காலகட்டங்களில் கிளர்ச்சிகள் தோன்றி ஆயிரக்கணக்கான மனித உயிர் அழிவுகள் ஏற்பட்டதென்பது வரலாறாகும். பல்வேறு அரச துறைகளை தனியார் மயப்படுத்துவதால் நாட்டில் வேலையற்றோர் தொகை அதிகரிக்கப்போகிறது.

தற்போது வங்கிகளில் கடமை புரிவோருக்கும், தனியார்மயம் ஆவதால் பல்வேறு நன்மைகள் உருவாகும், என்ற கதைகள் பரவலாக விடப்பட்டுள்ளன. தனியார் மயப்படுத்துவதால் ஏற்படப் போகும் நன்மைகள் என்பதை விளம்பரம்படுத்துவதற்காக ஒரு நிறுவனமே இலங்கையில், இயங்கி வருகின்றது. இந் நிறுவனங்கள் வெளியிடும், செய்திகள், எவரையும் மயக்கத்தக்கதாகவே இருக்கும். உதாரணமாக போக்குவரத்து துறையில் தனியார் நுழைந்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மக்கள் நேராகவே பார்த்துவருகின்றனர். நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களுக்கு பஸ்சேவையை நடத்த தனியார் பஸ் சேவையாளர்கள் பின்நிற்கிறார்கள். மழை, காற்று, மக்கள் குறைவு என்பன போன்ற காரணங்களிற்காக உடனடியாக பஸ்சேவை நிறுத்தப்படுவதையும் நாங்கள் அறிந்து வைத்திருக்கிறோம். மக்களை ஆடு, மாடுகள் போல் பஸ்களில் ஏற்றுவதையும், கண்டிருக்கிறோம். போதிய அறிவற்றவர்கள் கூட இச்சேவையில் மக்களை வதைப்பதை நாம் காண்கின்றோம். தனியார் மயப்படுத்தலால் ஏற்படும் பாதிப்புக்களை பஸ்சேவை மூலம் நாம் கண்டறிந்துள்ளோம். இதே போன்றே ஏனைய துறைகளும் தனியார் மயமானால் ஏற்படும் . எனவே தனியார் துறையினர் விடும் கவர்ச்சிகர விளம்பரங்களை கண்டு ஏமாறாது இந்த நாட்டின் சொத்தான வங்கிகளை அந்நிய தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்ப்பதை நிறுத்த போராடுவோம்.

படிப்பகம்

# தோட்டத் தொழிலாளரின் காணிகள் பொலிஸாருக்கு...

கொத்மலை நீர்த்தேக்கத்திட்டம் ஆரம்பமானபோது இந்நீ தேக்கத்தில் புதைந்து போன பகுதிகளுக்கான காணிகளை வழங் வதற்காக ஏனைய இடங்களில் காணிகள், சுவீகரிக்கப்பட்ட இக்காணிகளை அப்பகுதி தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங் வதற்குப் பதிலாக பொலிஸ் உயரதிகாரிகளுக்கு வழங்கப்ப கின்றன. இதனால் இத் தோட்டப் பகுதி மக்கள் மிக மோசம பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு சாராரை வெளியேற்றிவிட்டு இன் மொரு சாராரை குடியேற்றியமையும் ஒரு இனவொழிப செயலாகும்.

விக்டோரியாத் திட்டம் ஆரம்பமான போது பள்ளேகல பெ தோட்டத்தில் வெளியாரைக் கொண்டு வந்து குடியேற்றியதால் ஆயிரம் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர் பாதிக்க பட்டுள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திற்கு 1 ஏக்கர் காணி வழங் வதாக அச்சமயம் இருந்த காணி அமைச்சர் உடன்படிக்கை செய்தார், ஆனால் இவற்றையெல்லாம் மீறி முன்னா அரசியல்வாதிகளுக்கும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. இது போன்ற குடியே நடவடிக்கைகளினால் மலையகமும் எழுச்சி பெற வேண் அவசியத்தை உணர முடியும்.

# 40 ஆயிரம் தொழிலாளர் தொழில் இழப்பு

தேங்காய் எண்ணை உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 20 மேற்பட் தொழிற்சாலைகள், தமது உற்பத்தியை நிறுத்தியதால் 40 ஆயி துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர். ம நீண்ட காலமாக இந்த தொழிலில் ஈடுபட்டு வந்த இத் தொழ சாலைகள் திடீரென தமது உற்பத்தியை நிறுத்தியதன் மர்மம்தா என்ன?

வகை தொகை இன்றி பல்வேறு எண்ணெய் வகைகள் உலகி பாகங்களிலும் இருந்து, கட்டுப்பாடற்ற முறையில் இறக்கும செய்யப்படுவதே இதற்குரிய பிரதான காரணமாகும். தெங் ஏற்றுமதி இந்த நாட்டின் பிரதான ஏற்றுமதி துறையாகும். உள்ளூ நுகர்வில் அதிக தெங்கு உற்பத்தி பாவிக்கப்படுவதால் அந்நி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தெங்குப் பொருள் மூலம் அந்நி செலாவணியை சம்பாதிக்க முடியாது இருந்தது. அவ்வளவுதூ உள்ளூர் நுகர்வுக்கு தெங்கு பொருள்கள் உபயோகிக்கப்பட்டது

இன்று திறந்த பொருளாதார கொள்கையின் காரணமாக உறு யான ஒரு உள்ளூர் தொழில் நிர்மூலமாகியுள்ளது. இதற்கு திற பொருளதாரக் கொள்கையை இந்நாட்டிற்கு அறிமுகம் செ ஜே.ஆரில் இருந்து சந்திரிகா வரை பொறுப்பு வகிக்கின்றன முன்னைய காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வலது சாரி கட் யாகவும் இடதுசாரிகள், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர், உள்ளிட் அணியை இடது அணியினர் என்றும் மக்கள் அடையாளம் இட் ருந்தனர். ஆனால் சந்திரிகா ஜனாதிபதியானவுடன் இந்த முறை முற்றாக மாற்றிவிட்டார். பதவியில் இருந்த அனைத்து ஐக்கி தேசியக்கட்சி தலைவர்களையும் விட மிகவும் தீவிர வலதுசா கொள்கையுடையவராக இவர் விளங்குகின்றார். அண்மையி சந்திரிகாவால் கொண்டுவரப்பட்ட வரவு செலவு திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியினரே பாராட்டியுள்ளனர்.

அந்நிய நாட்டு பொருட்கள் என்றால் நல்லவை என்பது ப நிலைப்பாடு. ஆனால் பாவனைக்கு உதவாத பொருட்கள் கூ பிழையான வழிகளை கையாண்டு எமது நாட்டு சந்தைக்கு வரமுடியும். தடை செய்யப்பட்ட பல மருந்து வகைகள் இன் பாவனையில் இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து இரு கின்றனர். அத்துடன் என்ன பெயருடைய தடை செய்யப்பட் மருந்து வகைகள் உள்ளன என்றும் பட்டியல் இட்டு காட் யுள்ளனர்.

தேங்காய் எண்ணெய் ''கொலோஸ்ரோல்'' கொண்டது என் வாதப்பிரதிவாதங்கள் கொஞ்ச காலத்துக்கு முன்பு நடைபெற் வந்தது. ஆனால் இறுதியில் மருத்துவ நிபுணர்கள் தேங்கா எண்ணெய் அப்படிப்பட்டதல்ல என்றே அறிவித்தனர். பல்வே பட்ட வெளிநாட்டு எண்ணெய் வகைகள் வந்தாலும் அவற்றின விலை உயர்வாகவே உள்ளது. ஏழைகள் மிகக் குறைந்த விலையி வாங்கக்கூடிய ஒரு பாவனைப் பொருள் இன்று இல்லாம போனது ஏழைமக்களுக்கே பேரிழப்பாகும்..

புதிய சமதர்மம் பத்திரிகையில் தமது ஆக்கங்களை (கட்டுரை, சிறுகதை, கவிதை) வெளியிட விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆசிரியர்,
புதிய சமதர்மம்,
143/3, கியூ வீதி, கொழும்பு - 2.

www.padippakam.com



# சருகாக்கப்படும் இளம் குருத்து

## சஜித்தா சிகிச்சை பெற

## சந்திரிகா அரசு அனுமதி மறுப்பு



வவுனியா அகதி முகாம்களில் தமிழ் ங்கள் படும், இன்னல்களை ஒரு ன்ன பெண் குழந்தைக்கு ளைக்கப்பட்டுள்ள அநீதியின் மூலம் ிந்து கொள்ள முடியும். செல்வி ித்தா இராமச்சந்திரன் என்ற பிஞ்சு ழந்தைக்கே இங்கனம் அநீதி ைழக்கப்பட்டுள்ளது. இப்பெண் ர்ளையின் இரண்டு சிறு நீரகங்களும் ழதடைந்துள்ளதால், முதலில் வுனியா அரசினர் வைத்திய லையிலும், பின்பு அனுராதபுர வத்திய சாலையிலும், இறுதியாக ண்டி தேசிய வைத்தியசாலையிலும், ிச்சை செய்யப்பட்டது. கண்டியில் ிச்சை செய்த மருத்துவர்கள் குழந்தை

சஜித்தாவை இரண்டு கிழமைக்கு ஒருமுறை சிகிச்சை செய்வதற்கு கண்டி தேசிய வைத்தியசாலைக்கு வருகை தருமாறு கூறியுள்ளனர். துர்அதிர்ஸ்டவசமாக ''பாஸ்'' பெறுவதில் உள்ள சிக்கல்களினால் சஜித்தா சிகிச்சைக்கு கண்டி செல்ல முடியாத நிலை உள்ளது.

வவுனியாவில், இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் 5 பாரிய முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இம்முகாம்கள் ஹிட்லர் காலை வதைமுகாம்களாகவே காட்சி தருகின்றன. இம் முகாம்களில் 6,000 குடும்பங்களைச் சேர்ந்த 22000 மக்கள் உள்ளனர். இம்மக்கள் மீது பாதுகாப்பு கெடுபிடிகள் எல்லை மீறியுள்ளதாக தெரிய வருகிறது. முகாம்களில் தினமும் அடைபட்டு கிடந்ததால், பல இளம் வயதினருக்கு மனநோய் கூட ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது. கண்டபடி கைது செய்யப்படுதல், காணாமல் போதல், பிணமாக வீதியில் போடப்படுதல், என்பதை சாதாரண நிகழ்களாக இப்பகுதிகளில் உள்ளன. படிப்பதற்கு பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதற்கும் ''பாஸ்'' பெறவேண்டிய நிலை இங்கு காணப்படுகின்றது.

இந்த சூழ்நிலையில் சஜிதாவிவை கண்டி மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதில் பெரும் சிரமங்களை, சஜிதாவின் குடும்பம் எதிர் நோக்குகின்றது. வவுனியா முகாம்களில் வாழும், தமிழர் ஒருவர் தென்பகுதிக்கு செல்ல வேண்டுமானால் வவுனியாவில் நிரந்தரமாக இருக்கும் ஒருவர் பிணை நிற்க வேண்டும். பிணையாக நிற்பவர், சும்மா பிணையாக நிற்க மாட்டார், ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரை பணமாக கொடுத்தால்தான் ஒருவர் பிணை நிற்க முன்வருவார், ஒரு குடும்பத்திற்கு நிவாரணமாக இலங்கை அரசால் 1260/= ரூபா மட்டுமே, வழங்கப்படுகிறது. இப்பணத்தைக் கொண்டு, இங்கு வாழும் மக்கள், மூன்று வேளைக்கு உணவே உண்ண முடியாது. இந்நிலையில் இவர்களால், பிணைநிற்பவருக்கு பணம் கொடுத்து, தென்பகுதிக்கு செல்வதென்பது முடியாத காரியமாகும்.

குழந்தை சஜித்தாவை 2 கிழமைக்கு ஒருதரம் கண்டி மருத்துவமனைக்கு கூட்டிச் செல்ல வேண்டி இருந்தது.



இது நடைபெற முடியாத ஒரு நிலையாகும்.

தற்போது சஜித்தா சிகிச்சை எதுவும் இன்றி முகாமில் வாடுகின்றாள். நாளுக்கு நாள் சஜித்தாவின் உடல் நிலை மோசம் அடையலாம். எனவே ஒரு இளம் குருத்து இரக்கமற்ற, காட்டுமிராண்டித் தனமான இராணுவ சட்டங்களால் சருகு ஆகின்றது.



# மாவோ வாதமும் புரட்சியும்

விவசாய மக்களையும், குட்டி முதலா த்துவ சக்திகளையும் திருப்திப்படுத் வதற்காக எழுந்த வாதமே மாவோ ாதம் ஆகும். இது ஸ்டாலின், மற்றும் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஸ்டா லினிசவாதிகளின் செல்வாக்கின் ஊடா கவே உதித்தது.

ஸ்டாலினசம் என்பது ஓர் அதிகாரவாத வியாதியாகும். அது முன்னாள் சோவி யத் ஒன்றியத்திலிருந்தே பரவத் தொடங் கியது. எந்த ஒரு தேசியமய பொருளா தாரத்தின் உள்ளேயும் ஸ்டாலினிச சக்தி கள் வளரும். அது மரமொன்றில் வாழும் குருவிச்சை போன்றதொரு கிருமியா கும். சீன ஸ்டாலினிசவாதம், சோவியத் ஒன்றியத்தில் வளர்ச்சி பெற்ற ஸ்டாலி னிசத்தினூடாக வளர்ந்ததாகும். ஏனென் றால், மாவோவும், அவர் வழிநடத்திய கொரில்லா இயக்கமும், பெரிதும், சோவி யத் ஒன்றியத்திலேயே தங்கியிருந்தது. ''புதிய ஜனநாயகம்'' என்பதின் மீது உருவாக்கப்பட்ட தத்துவமே, ''மாவோவின்'' மிகப் பிரதானமான சித்தாந்தமாகும், இந்த சித்தாந்தத்தின் படி ஒரு பின் தங்கிய நாட்டில், புரட்சிகர அரசாங்கம் ஒன்று, பாட்டாளி வர்க்கம், விவசாய மக்கள், புத்திஜீவிகள் மற்றும் குட்டி முதலாளித்துவ சக்தி ஆகிய நாலு வர்க்கங்களில் இருந்து ஒரு புரட்சிகர அரசாங்கம் எழலாம். இந்த கூட்டு பாட் டாளிவர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழேயே கட்டியெழுப்பப்பட வேண்டும். விவ சாய மக்கள் புத்திஜீவிகள் மற்றும் குட்டி முதலாளித்துவ சக்திகளின் ஆதரவுடன் ஏற்படுத்தப்படும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், இதற்கும் இடை யில் என்ன வேறுபாடு உண்டு என்பது தெளிவாகவில்லை. உண்மையில் இவற் றுக்கிடையேயான வேறுபாடு விவசாய மக்கள் செல்வாக்கில் இருந்தே மேற்படி வேறுபாடு உண்டாகிறது. எப்போதுமே விவசாய மக்கள் செல்வாக்கு செலுத்தக் கூடிய கட்டங்களில், அது தேசிய முதலா ளித்துவத்தின், தலைமையின் கீழேயே அவ்வியக்கம் வழிநடத்தப்படும்.

மாவோ வாதம் நடைமுறையில், வர்க்க இணக்கப்பாட்டுக்கான கருவியாகவே விளங்கியது. இது இந்தனோசியாவில் பேரழிவினையே ஏற்படுத்தியுள்ளது. மாவோ வாதம் எப்போதும் விவசாய மக்களை தலைமையாகக் கொண்ட கொரிலா போராட்டத்தையே முன் னெடுக்கிறது.

எனவே இது விவசாய மக்களை தளமாக கொண்டிருந்ததேயன்றி தொழிலாளர் களை தளமாக கொண்டிருக்கவில்லை. அவ்வாறே மாவோ வாதம் வியட் னாமிய மக்களின் போராட்டத்திலும், செல்வாக்கு செலுத்தியது. ஆனால் பாரா ளுமன்ற ஜனநாயகம் நிலவும் நாடுகளில் அதிதீவிர இடதுசாரி பிரிவாக தன்னை இனம் காட்டியது.

கிராமிய ஆயுதப் போராட்டம் முக்கிய மானது என்று கருதப்படும் நாடுகளில் மாவோவாதம் செந்தளம் இருக்க வேண் டும் என வலியுறுத்துகிறது. அதாவது தன்னை நிலை நாட்டிக் கொள்வதற்கு கொரிலா இயக்கம் செந்தளத்தில் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். போராட்டங்கள் அங்கு இருந்துதான் வளர்ந்து வரவேண்டும்.

இந்தியாவில் மிகவும் பின்தங்கிய பகுதி களில் மாவோவாதத்தை பின்பற்றியே பல நக்சலயிட் அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. இவ் அமைப்புகள் தாம் தோன் றிய எல்லைகளுக்கு அப்பால் வியாபிக்க வில்லை. இறுதியில் இவ் அமைப் புக்கள் ஒன்றிணைந்து தான் மார்க்சீய லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தன. இக்கட்சி கூட ஈற்றில் பல பிரிவுகளாக சிதறிப் போனது.

றோகண விஜயவீர மாவோவின் சிந் தனையால் கவரப்பட்டார். ஆனால் விஜ யவீரா செந்தள சித்தாந்தத்தை ஏற்க வில்லை, மாறாக இவர் நாடு தழுவிய ஒன்றிணைக்கப்பட்ட தாக்குதல் நட வடிக்கையிலேயே நம்பிக்கை வைத்தார். இந்த இயக்கமானது நாடு தழுவிய இரக சிய அமைப்பாக இருக்க வேண்டும் என வும் விரும்பினார்.

பல்தேசிய கம்பனி முறைமையும், உலக மயமாக்கல் ஏற்பாடும், வளர்ச்சி பெற்ற தும், மாவோவாதம், காலவதியாகிவிட் டது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி யும், சீனாவில் ஏற்பட்ட மாற்றங்களும் கூட மாவோவாதம் செல்லுபடியற்றது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.



கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா

படிப்பகம்

www.padippakam.com



# பண்டாரநாயக்க முதல் சந்திரிகா வரை



(சென்ற இதழ் தொடர்ச்சி)

### பிரேமதாச யுகம் - சர்வகட்சி மாநாடு - புலிகளுடன் பேச்சு

ஜே.ஆருக்குப் பின் பதவியேற்ற ரணசிங்க பிரேமதாஸ ஒரு மலிவான மக்கள் வாதப் போக்கினை கடைப்பிடிப்பவராக விளங்கினார். இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக அவரும் ஒரு சர்வ கட்சி மாநாட்டினை கூட்டினார். அதன் பின் பிரத்தியேகமாக தமிழீழ விடுதலை புலிகளுடன் 14 மாதங்களாக பேசினார். ஆனால் உருப்படியான தீர்வு திட்டமெதனையும் அவர் முன்வைக்கவில்லை. எனவே அந்த முயற்சியும் 1990 யூன் மாதத்தில் தோல்வியை தழுவியதுடன் இரண்டாவது ஈழப்போர் வெடித்தது. ''ஈழம் (Eelam) தவிர்ந்த ''எல்லாம் (Ellam) வழங்குவதற்கு தான் தயாராக இருப்பதாக கூறித்திரிந்தார். ஜே.வி.பி. அழிப்பு என்ற போர்வையில் பிரேமதாச யுகம் தென்னிலங்கையிலும் படுபயங்கரமானதாகவே விளங்கியது. இறுதியில் 1993ல் பிரேமதாஸ விடுதலைப்புலிகளால் கொலை செய்யப்பட்ட போது குறிப்பாக தென்னிலங்கையில் பட்டாசு கொழுத்தி கொண்டாடப்பட்டது.

### விஜேதுங்க - இனப்பிரச்சினை இல்லை - அது பயங்கரவாதப் பிரச்சினை

பிரேமதாஸ கொலை செய்யப்பட்டதனை அடுத்து அதிஸ்டரீதியாக ஜனாதிபதியாக பதவியேற்ற டி.பி.விஜேதுங்க பிரேமதாஸா போன்று தன்னாதிக்கமேனும் கொண்டிருக்கவில்லை. உண்மையில் அவர் ஒரு ''நொண்டி வாத்து'' ஜனாதிபதியாகவே வர்ணிக்கப்பட்டார். எவ்வாறாயினும் தமிழ் தேசிய இனப் பிரச்சினையை பொறுத்தமட்டில் அவர் முற்றுமுழுதாக சிங்கள பேரினவாதிகளின் சிந்தனைக்கு இசைவானராகவே விளங்கினார். நாட்டில் நிலவுவது பயங்கரவாத பிரச்சினையே ஒழிய இனப்பிரச்சினையென்று ஒன்றில்லை என்பதே அவரின் நிலைப்பாடாயிருந்தது. மேலும் அன்று அமைச்சராயிருந்த இ.தொ.க. தலைவர் தொண்டமானையும் அவர் கடுமையாக சாடினார். மலையக மக்கள் சார்பில் ''ஒரு கோப்பைக்கு'' பதிலாக ''இரண்டு கோப்பை'' கேட்கிறார் என சீண்டினார். அவர் 1994 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு திட்டமிட்டிருந்தார். ஆயினும் அது நடைபெறவில்லை. ஏன் என்றால் முதலில் பாராளுமன்ற தேர்தலை நடத்தி ஒரு சில மாதங்களுக்கு பின் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது என அவர் தெரிந்தோ தெரியாமலோ தீர்மானித்தார். ஆனால் பாராளுமன்ற தேர்தலில் பொதுஜனமுன்னணி ஒரு நூல் கன பெரும்பான்மையுடனாவது வெற்றியீட்டியது. அதன் பின் விஜேயதுங்க கிலேசமடைந்து ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். முன்னுக்கு வரவேண்டும் என நிறைந்த ஆசை கொண்டிருந்த காமினி திஸநாயக்காவிற்கு அவர் இடமளித்திருந்த போதும் விஜயதுங்க அவருக்காக பிரசாரம் செய்வதற்கு கூட முன்வரவில்லை. ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது குண்டுவெடிப்பில் காமினி திஸாநாயக்க கொலை செய்யப்பட அவரின் மனைவி சிறிமா ஐ.தே.க வேட்பாளராக நிறுத்தப்பட்டார். பொதுஜன முன்னணி பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி பிரதம மந்திரி பதவியில் இருந்த சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட போவதாக அறிவித்திருந்தார். சந்திரிகா தான் அன்று மிக சிறந்த அபேட்சகர் என கருதப்பட்டார். 17 வருட ஐ.தே.க. ஆட்சியின் கீழ் 1983ல் இடம் பெற்ற படுமோசமான இனக்கலவரத்தை அடுத்து 11 வருடகாலமாக தொடர்ந்த யுத்தத்தின் காரணமாக வரலாறு காணாத உயிர், உடைமை இழப்புகளை சந்தித்து அவலத்தில் மூழ்கியிருந்த தமிழ் மக்கள் சந்திரிகாவில் பெரிதும் நம்பிக்கை வைத்தனர். விஜேயதுங்க போலன்றி, அரசியல் ரீதியாக தீர்வு காணப்பட வேண்டிய ''இனத்துவ பிரச்சினை'' இருப்பதாகவும் அது வெறுமனே பயங்கரவாத பிரச்சினை அல்ல எனவும் கூறிவைத்தார். அதன் காரணமாக அவர் தமிழ் மக்கள் தன்னை அமோகமாக ஆதரிக்கும் நிலைக்கு கவர்ந்து விட்டதுடன் 62.28% வீத வாக்கு பலத்துடன் வெற்றியும் ஈட்டியிருந்தார்.

### சந்திரிகா பதவிக்கு வந்து ''சமாதானத்திற்கான யுத்தம்''

சந்திரிகா பிரதம மந்திரியாக பதவியேற்ற கையோடு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை அதிகாரிகள் மூலம் ஆரம்பித்து வைத்தார். வட கிழக்குக்கு உணவு, மருந்து, எரிபொருள், அனுப்புதல் மீது விதிக்கப்பட்டிருந்த தடையும் ஓரளவு தளர்த்தப்பட்டது. அரசியல் தீர்வுத்திட்டம் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பது தெரிந்ததே. அதிகாரிகள் மட்டத்தில் நடத்தப்பட்ட இப்பேச்சுவார்த்தைகள் பரஸ்பரம் நம்பிக்கையூட்டும் நடவடிக்கையென சோடிக்கப்பட்டது. மக்கள் சுதந்திரமாக நடமாட இடமளிக்குமுகமாக பூநகரியிலிருந்த இராணுவ தளத்தினை அகற்றிவிடுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை அரச தரப்பினரால் நிராகரிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து கொண்டிருந்த போதும் பரஸ்பர அவநம்பிக்கை நிலை அகன்றிருக்கவில்லை. மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் எஞ்சியிருந்த பொருளாதாரத் தடைகளும் நீக்கப்படவில்லை. எனவே அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் 1995 ஜனவரியில் ஏற்பட்டிருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவுற்றது. ஏப்ரல் 19ல் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மீள ஆரம்பித்தனர். அரசாங்கம் கவர்ச்சியான பிரசாரத்தில் கவனம் செலுத்துகிறதே தவிர இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் உறுதியற்றதும், நேர்மையற்றதுமான போக்கினையே கடைப்பிடிப்பதாக புலிகள் குற்றம் சாட்டினர். பேச்சுவார்த்தைகள் முறிவுற்றதற்கு புலிகள்தான் பொறுப்பென பதிலுக்கு குற்றம் சாட்டிய அரசாங்கம் ''சமாதானத்திற்கா யுத்தத்தை'' ஆரம்பித்தது. ''முன்னேறிப் பாய்தல்' எனும் பெயரிடப்பட்ட தாக்குதல் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டது. யுத்தம் தொடர்ந்து முன்னரைக் காட்டிலும் மிக கோரமாக நடத்தப்படுகிறது. 1983ல் முதல் வரலாறு காணாத துன்ப துயரங்களை அனுபவித்து வந்த தமிழ் மக்கள் மீது மேலும் அவலங்கள் சுமத்தப்படுகின்றன.

### யுத்தமும் பேச்சுவார்த்தை நாடகமும்

யுத்தத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக அண்மைக்காலங்களில் அரசாங்கம் பல தோல்விகளைத் தழுவியிருந்த போதும், யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கே அது கங்கணம் கட்டி நிற்கிறது. அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் எனும் நாடகத்தினை நடித்துக் கொண்டு, யுத்தத்திற்காக 22 மில்லியன் அமெரிக்க டொலர் (ஏறத்தாழ ரூ 1630 மில்லியன்) பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. தமிழ் இனத்தையே இராணுவ வாயிலான அடிபணிதலுக்கு ஆளாக்கி அழித்தொழித்து விடுவதுதான் அரசாங்கத்தின் திட்டம் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

1999 தேர்தலுக்குப் பிந்திய காலம் - 1999 டிசெம்பர் ஜனாதிபதி தேர்தலில் ஒருவாறு 51.12% வாக்கினைப் பெற்று வெற்றியீட்டியுள்ள சந்திரிகா அம்மையார் ஆற்றிய உரைகளில் கூறிவைத்துள்ள சில கருத்துக்களைப் பார்ப்போம்.

1) தனது அரசாங்கம் ''தமிழ் மக்களுக்கு தனிநாடொன்றினை விட மற்றை எல்லாவற்றையும் வழங்கியுள்ளது''

2) பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முழு ஆட்சிக்காலத்திலும் ஒரு தமிழ் பிரஜையாவது இம்சைப்படுத்தப்படவில்லை.

3) தனது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு பாரிய சேவைகளை ஆற்றியுள்ளது. இதனை அவர்கள் உணர்ந்து குரோதமான போக்கினை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

4) வடக்கிலோ தெற்கிலோ நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உதவுபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும்.

இவற்றைப் பார்க்கும் போது முதலாவதாக ''ஈழம்'' (Eelam) தவிர்ந்த ''எல்லாம்'' (Ellam) தமிழ்மக்களுக்கு உண்டு. அல்லது வழங்கப்படும் என அன்று முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கூறியது தான் ஞாபகததிற்கு வருகிறது. அடுத்ததாக உண்மையற்ற எதற்கும் எள்ளளவு பெறுமதியும் கிடையாது. தமிழ் விடுதலைப்புலிகள் தோற்றம் பெறு தற்கே ஸ்ரீ.ல.சு.க.வும், ஏன் பொது ஜ முன்னணியிலுள்ள ஏனைய கட்சிக கூட, பெரும் பங்காற்றியிருந்தன என்ப வரலாறு.

1977 முதல் 1994 வரை பட்டது போது என எண்ணிய தமிழ் மக்களுக்கு 19 முதல் சோதனை மேல் சோதனை தா போதுமடா சாமி என்ற தொடர்க தான். அதே நேரத்தில் முழு நாட்டி பொருளாதார அபிவிருத்தியுமே குன் யுள்ளது. மேலும் மோசமான தளம்ப நிலைதான் காத்திருக்கிறது. இதற்கு அ தமற்ற, வெல்ல முடியாத கொடிய ய தமே பிரதான காரணம் என்பதை நா சொல்லவும் வேண்டுமா? தமிழ் மக்க எதிர் நோக்கும் சோதனைகள் ஒருபு மிருக்க, அதிகப் பெருபான்மையாயிரு கும் எல்லா ஏழை எளிய மக்களு மேலும் ஏழைகளாகிக் கொண்டிருக்கி றனர். வாழ்க்கைச் செலவுப் பழுவினா திணறிக் கொண்டிருக்கின்றனர்.

### சந்திரிகாவின் 1994 வெற்றியை கொண்டாடிய மக்கள் வன்னியில் அழிவின் விழிம்பில்

இந்த கொடிய யுத்தமானது தமிழீழ வி தலைப் புலிகளுக்கெதிரானதே தவி தமிழ் மக்களுக் கெதிரானதல்ல என எ வளவு தான் அரசாங்கம் பிரசாரம் செய் வருகிறதாயினும் அது உண்மையி தமிழ் மக்களுக்கெதிரானதாகவே எல்ல விதத்திலும் உள்ளது. குறிப்பாக எடு துக் கொண்டால், கட்டுப்பாடற் பகுதிகள் என்றழைக்கப்படும் வன் போன்ற பகுதிகளில் வாழும் மக்க கடந்த 5 வருடங்களாக திட்டமிட்டு உ வாக்கப்பட்ட பலத்த உணவு, மருந் பற்றாக்குறை காரணமாக அழிவின் வி ம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்க வேறு நாட்டவர்களா? சந்திரிகா அ மையார் 1994ல் ஈட்டிய வெற்றியை கொண்டாடிய மக்கள் மீது இவ்வள அவலங்களைச் சுமத்திக் கொண்டு தமி மக்களுக்கு ஏராளமான சேவைகளை செய்து விட்டதாக எவ்வாறு கூற முடியு

### சிங்கள பௌத்த பேரினவாத, சிங்கள வீரவிதான சக்திகள் உற்சாகமடைதல்

ஜனாதிபதி சந்திரிகாவின் அண்மை கால போக்குகள் யாவும், தமிழ் மக் ளோடு சமாதானம் தேவையில்லை, த ழீழ விடுதலைப் புலிகள் முற்றாக அழி கப்பட வேண்டும் எனும் நிலைப்பா டிலுள்ள சிங்கள பௌத்த பேரினவா மற்றும் சிங்கள வீர விதான போன் சக்திகளுக்கு மிகுந்த உற்சாகத்தினை அளித்துள்ளன. தமிழ் மக்கள் அரசா கத்திடமிருந்து சலுகைகளையோ சன்ப ணங்களையோ வேண்டி நிற்கவில்லை பாரதீனப்படுத்த முடியாத தமது உரிமை களுக்காகவே போராடுகிறார்கள். த ழீழ விடுதலைப் புலிகளுடன் பேச் வார்த்தை நடத்தாமல் எதுவித தீர்வு சாத்தியமில்லை என்பது எவருக்கு இன்று நேற்று தெரிந்த விடயமல் தற்போது சர்வதேச அழுத்தங்களும் அ கரித்து வருகின்றன. சந்திரிகா அம்மை யாரும் புலிகளுடன் பேசத்தான் போ றேன் என்று கூறியுள்ளார். தமிழ் மக்க ஒரு தேசிய இனம் எனும் யதார்த்தத்தை ஏற்று அந்த இனம் சமத்துவமாக, சு நிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட் அதிகாரத்தையும் இறைமையையும், அனு பவிக்க தங்குதடையற்ற உரித்துடைய என்பதனை ஆட்சியாளர்கள் ஏற்று கொள்ள வேண்டியதுதான் அவர்களின் கடப்பாடாகும்.

படிப்பகம்

www.padippakam.com






# கிரிக்கற் போட்டிகளும் வன்முறைகளும்

ஆங்கிலேய கனவான்களுக்கு, என அறிமுகப்படுத்தப்பட்ட இவ்விளையாட்டு பின்பு ஆங்கிலேயர் ஆட்சி செய்த அனைத்து நாடுகளுக்கும் பரவியது. கொக்கோகோலாவும், பெப்சியும், பன்ராவும் எப்படி விளம்பரத்தின் மூலம், ஏழைகளின் வீட்டுக் கதவுகளை தட்டிக் கொண்டு நிற்கின்றதோ, அதேபோல் இன்று கிரிக்கட் விளையாட்டும் எல்லோர் கவனத்தையும் ஈர்த்து நிற்கிறது. விளம்பர உலகில், அதிமுக்கியம் வாய்ந்த ஒரு விடயமாக கிரிக்கற் மாறிவிட்டது. ஏழைப்பிள்ளைகள் எட்டிக்கூட பார்க்க முடியாத விளையாட்டு கிரிக்கற் விளையாட்டாகும். பெரும் வசதி படைத்த குடும்பங்களின் பிள்ளைகளே இவ்விளையாட்டில் அதிகமாக ஈடுபடுகின்றனர். ஆனால் இந்த வசதி படைத்தவர்களின் விளையாட்டை கஞ்சிக்கு கூட வழியில்லாது நிற்கும் ஏழைகள் ரசிக்க வேண்டுமென சூழ்நிலை நிர்ப்பந்திக்கிறது.

கிரிக்கற் விளையாட்டை மையமாக வைத்து பல சூதாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் செய்திகள் வெளிவந்தன. குறிப்பாக பாக்கிஸ்தானிய வீரர்கள் இதில் அதிகமாக சம்பந்தப்பட்டிருந்ததை யாவரும் அறிவர்.

நகரங்களில் உள்ள பிரபல பாடசாலைகள் மோதுகின்ற கிரிக்கற் விளையாட்டு இன்று வன்முறை நிறைந்த ஒன்றாக மாறியுள்ளது. துப்பாக்கிகளால் ஆட்கள் மிரட்டுதல் போன்றனவும் இடம் பெறத் தொடங்கியுள்ளன. இத்தகைய வன்முறைகளில் பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள் ஈடுபடுகின்றனர். அதி உயர் தரம் வாய்ந்த பாடசாலை மாணவர்களே இதில் ஈடுபடுகின்றனர். அமைச்சர்கள், அரச பிரதானிகள் பிள்ளைகள் என்பதால் அவர்கள் மனம்போன போக்கில் செயற்பட முடிகிறது.

கொழும்பு நகரில் உள்ள மிகப்பெரிய பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் பெரும் வன்முறை ஏற்பட்டதாக தெரியவருகிறது. இதில் பாதிப்பு அடைந்தவர்கள், கொழும்பு மருத்துவ மனையின் விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. இச்சம்பவங்களுக்கு ஒரு அமைச்சரின் மகனும் தொடர்புபட்டிருந்தார் என்று கூறப்பட்டது. ஆனால் சம்பந்தப்பட்டவர்களால் இது மறுக்கப்பட்டுள்ளது. கிரிக்கற் விளையாட்டு நாகரிகமான விளையாட்டாக பேசப்படுவதுண்டு. ஆனால் இன்று பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் இவ்விளையாட்டு காடைத்தனம் மிகுந்ததாக காணப்படுகின்றது. றோயல் கல்லூரி மாணவர்கள் என நம்பப்படும் சிலர் தமது எதிர்ப்பாளர்களை போட்டி நடைபெறும்போது தாக்குமாறு கூறி ஒரு சிறு கடை உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா வழங்கியதாகவும் தெரியவருகிறது. இதேவேளை பெண்கள் பாடசாலைகளுக்குள் நுழையும் ஆண் மாணவர்கள் பணம் சேகரிப்பதும், பெண்கள் பாடசாலைகளில், குழப்பம் விளைவிப்பதும், தற்போது வழமையாகிவிட்டது. சில மாணவர்கள் பாடசாலை தளபாடங்களை உடைக்கும் நிலைக்கு கூட செல்கின்றனர். இவர்களை கட்டுப்படுத்த முயல்கின்ற அதிகாரிகளை கூட தாக்குகின்றனர்.



மாணவர்களுக்கு எதிராக செயற்படுகின்ற பொலிஸ் அதிகாரிகளை வடக்கு, கிழக்கிற்கு போக விருப்பமோ எனவும் மிரட்டுகின்றனர்.

சில மாணவர்கள் வீதிகள் தோறும் நிதி சேகரிக்கும் முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். இங்ஙனம் நிதி சேகரிப்பவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்கள்தானா என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆரம்ப காலங்களில் பாடசாலை சுற்றாடலிலும், பிரதான வீதிகளிலும், நிதி சேகரித்த மாணவர்கள் இன்று சின்ன ஒழுங்கைகளில் உள்ள வீடுகளுக்குச் சென்று மிரட்டும் பாணியில் பணம் கேட்கின்றனர். யுத்தத்தால் மனம் நொந்து இருக்கின்ற தமிழ் மக்களும் இந்த மிரட்டல்களுக்கு பணிந்து பணம் கொடுத்துள்ளனர்.

மாணவர்களின் விசமத்தனங்களை படம் பிடிக்க முயன்ற பத்திரிகையாளர் கூட மாணவ கூட்டத்தின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளார்.

மாணவர்கள் தமது மகிழ்ச்சியை நீண்டகாலமாக இம்முறைகளில் கொண்டாடுவதை சிலர் ஆதரிக்கலாம். ஆனால், காடைத்தனம் மிக்க இச்செயற்பாட்டை நாகரிகம் உள்ள எவரும் ஏற்க மாட்டார்கள். வசதி படைத்த பெற்றோரின் பிள்ளைகள் செல்லம் கொஞ்ச வேண்டுமானால், அவர்களை வடக்கு கிழக்கு போர் முனைக்கு அனுப்பி வைக்கலாம். தாம் சுகம் அனுபவிப்பதற்காக, தாம் பதவியில் இருப்பதற்காக இனவாதத்தை அரசியலுக்குள் நுழைய விட்ட இந்த தனவந்தர் கூட்டம் தென் இலங்கையில் உள்ள ஏழைகளின் பிள்ளைகளை யுத்தமுனைக்கு அனுப்புகின்றனர்.

தமது பிள்ளைகளை காடைத்தனம் புரிவதற்கு வீதிகளில் உலாவ விட்டுள்ளனர். காடைத்தனம் புரியும் மாணவர்களின் சேட்டைகள் தாங்க முடியாத பல பெண்கள் பாடசாலைகள் பொலிசாரை பாதுகாப்புக்காக பாடசாலை முன்னே நிறுத்தியுள்ளனர். தாம் ஆட்சியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகவே இன்று மேட்டுக் குடியினரால் யுத்தம் நடத்தப்படுகிறது. இதற்காக பெரும் எண்ணிக்கையான படையினர் நாடு முழுவதும் நிலை கொண்டு உள்ளனர். மறுபுறத்தில் இந்த உயர்குடியினரின் மாணவர்கள் புரியும் சேட்டைகளுக்கு பாதுகாப்புக்காக பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சேட்டைகளில் ஈடுபடும் மாணவச் செல்வங்களுக்கு எதிராக பொலிசார் செயற்பட்டால், அவர்கள் வடக்கு கிழக்கிற்கு மாற்றப்படுவார்கள் என்ற அச்சுறுத்தலும் உள்ளதும் தெரிந்தது. இந்த விதமான ஆட்சிக்கு அரசியல் நிபுணர்கள் வரலாற்றில் என்ன வரைவிலக்கணம் கொடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

## சிறைக்கனவு

"முத்து மாதவன்"

சிறையிலே நானொரு கனவு கண்டேன்- சிறு
கவியிலே அதனையே சொல்ல வந்தேன்!
தாய் மடி தவழ்ந்த மண்ணில் தோரணமாம்
-நம்
தமிழர்க்கு விடுதலையே காரணமாம்.

வீதியெல்லாம், பூப்பந்தல், நிறைகுடங்கள் -
மடல்
வீசி மகிழ்ந்து நிற்கும வாழை மரங்கள்
வீரமாய்க் கேட்கின்ற பாட்டொலிகள் - சிறு
சோகமாய், செய்கின்ற அஞ்சலிகள்

கனகமலர் சூடிவந்த கண்மணிகள் -தம்
காதலரை தேடி அலைந்த பச்சைக் கிளிகள்
பூஞ்சோலை தனில் பாடும் கருங்குயில்கள்
-தன்
பொற் தோகை விரித்தாடும் அழகு மயில்கள்!

அடிமையில்லை என்கின்ற குர ஒலிகள்
-நாம்
சுதந்திரம் பெற்றுவிட்ட மகிழ்வலைகள்
போர் மறவர் தோழ் புரளும் மலர்மாலை
-அவர்
வீர மதைப்பறை சாற்றும் கவி ஒலை.

திரும்புகின்ற திசை தோறும் வாழ்த்துரைகள்
-தமிழர்
புது வாழ்வில் இணைகின்ற புன்னகைகள்
அன்னையிவள் பூமியெலாம் அழகாகும் -
நான்
ஆவலோடும் சொன்னதெல்லாம் நடந்தாகும்

படிப்பகம்

www.padippakam.com





# மலையகத் தமிழர்கள் - புதிய பார்வை



மனோ கணேசன்

இந்நாட்டின் தேசிய இனச் சிக்கல் இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்நிலையில் இலங்கை நாட்டு மக்கள் அனைவரும் இனரீதியாக கூர்மையடைந்துள்ளார்கள். குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே இனத்துவ சிந்தனையும், கலாச்சார அடையாளத்தை முன்னெடுத்துச் செல்லும் அல்லது பாதுகாத்துக் கொள்ளும் போக்கு காணப்படுகின்றது. இந்த இனரீதியாக அணிதிரள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் தன்னிச்சையாக ஏற்படுத்தப்பட்டதல்ல. இவை இந்நாட்டின் பேரினவாத கட்சிகளால் இந்நாட்டிற்கு வழங்கப்பட்ட பரிசுகள், சுதந்திர இலங்கையில் வரலாற்றில் மாறி, மாறி ஆட்சி செய்துள்ள இரண்டு பெரிய கட்சிகளும் தமிழ் பேசும் மக்களை நடத்தி வரும் விதம் காரணமாக தமிழ் பேசும் மக்கள் தம்மை காப்பாற்றிக் கொள்ள வேறு வழியில்லாமல் இனரீதியாக அணிதிரள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளார்கள்.

அதே வேளையில் புதிய இலங்கையின் உருவாக்கத்தின் போது தமிழர்கள் என பொதுவாக அடையாளங் காணப்பட்ட சமூகமானது இன்று பல்வேறு உட்பிரிவுகளிற்கும், கலாச்சார தனித்துவங்களிற்கும் உரிய அங்கீகாரத்தை அளித்தே ஆக வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. இது தமிழ் மக்களின் சக்தியை பலவீனப்படுத்துவதாக அல்லாமல் மறுபக்கத்தில் உட்பிரிவுகளை அங்கீகரித்து ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒட்டுமொத்தமான தமிழ் பேசும் மக்கள் சக்தியை பலப்படுத்துவதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக்கு உள்ளான ஈழத்தமிழர்கள் தம்மை இன ரீதியாக அணிதிரட்டிக் கொண்டுள்ளார்கள். அதையடுத்து இந்நாட்டு முஸ்லிம்கள் இனரீதியாக அணிதிரண்டுள்ளார்கள். இந்நிலையில் இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள் மத்தியிலே இப்போது இந்த இனரீதியாக சிந்தனை எழுச்சி பெற்று வருகின்றது.

தோட்ட மக்கள் என்ற வரையறைக்குட்பட்டு அழைக்கப்பட்டு வரும் மலையக தமிழ் இந்திய வம்சாவளி இலங்கையர்கள் இன்று ஒரு தேசிய இனமாக வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பது ஒரு அடிப்படையான விடயம். தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர் வர்க்கத்தினரே இன்னமும் பெரும்பான்மையாக இருந்தாலும்கூட, இன்று தோட்ட வரம்புகளுக்கு வெளியேயும் இந்த மக்கள் மத்தியிலே ஒரு பாரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தனியார் துறை ஊழியர்களாக, வர்த்தகர்களாக, தொழிலதிபர்களாக, ஆசிரியர்களாக, படித்த பட்டதாரிகளாக, அரச ஊழியர்களாக, மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, கலைஞர்களாக பல்வேறு சமூக அடுக்குகள் தோன்றியுள்ளன. இவையெல்லாம் ஒன்று சேர்க்கப்படும் பொழுது ஒரு தேசிய இனம் உருவாகின்றது.

மலையகத்தின் பிரச்சினைகள் தோட்டத் துறையின் தொழிற்சங்க பிரச்சினைகள் மாத்திரமே என்று தான் நாடு எண்ணிக்கொண்டிருக்கின்றது. இந்நாட்டின் ஏனைய இனத்தவர்கள் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து கொடிகட்டிப் பறக்கும் பொழுது, மலையக தமிழர்கள் குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையே இன்றைய யதார்த்தமாகும். வெறும் தொழிலாளர்களாக தோட்ட வரம்புகளுக்குட்பட்டு தொழிற்சங்க தேவைகளுடன் மாத்திரம் வாழ்ந்த காலம் மலையேறி விட்டது. இன்று தொழிற்சங்க தலைமைகளுக்கு அப்பாற்பட்ட பரந்த ஒரு அரசியல் தலைமை தேவை என்பது காலத்தின் கட்டாயம். மலையகம் தனது சமூக வளர்ச்சியின் ஒரு காலகட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்குள் நுழைந்து கொண்டிருக்கின்றது.

இதன் சாராம்சம் தொழிற்சங்க அல்லது தொழிலாளர் வர்க்க முக்கியத்துவத்தையும், பிரச்சினைகளையும் பின்தள்ளுவதல்ல. குறைத்து மதிப்பிடுவதுமல்ல. தொழிலாளர் வர்க்கத்தினர் இந்நாட்டின் ஏனைய சிங்கள, வடகிழக்கு தமிழர், முஸ்லிம் இனங்களில் கூட இடம் பெற்றுள்ளார்கள். ஆனாலுங்கூட இந்த இனத்தவர்களின் இனரீதியான அபிலாஷைகள் முன்வைக்கப்படும் பொழுது அவை அந்த மக்கள் திரளினுள் அடங்கியிருக்கக்கூடிய தொழிலாளர்களினது தொழிற்சங்க பிரச்சினைகளுடன் பிணைக்கப்படுவதில்லை. ஆனால் மலையகத்தைப் பொறுத்தவரையும் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள இனரீதியாக அடையாளங் காணப்படுவதில்லை. அவை தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்க கோரிக்கைளுடன் பிணைக்கப்பட்டு குழப்பப்படுகின்றன. உண்மையிலேயே இந்த ''குழப்ப சிந்தனை'' தற்செயலாக ஏற்பட்டதல்ல. மலையகத் தமிழர்களை தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்களாகவும், அவர்களது பிரச்சினைகளை தொழிற்சங்கப் பிரச்சினைகளுடன் மட்டுப்படுத்தி பார்ப்பதும் இன்று இந்நாட்டிலே பலருக்கு மிகவும் வசதியாகப் போய்விட்டது. மலையகத்தமிழர்களை சுரண்டி வாழும் பாரம்பரியதொழிற்சங்க தலைமை தனது சந்தா அரசியலைக் கைவிட்டு தனது நலன்களை விட்டுக்கொடுக்க தயாராக இல்லை. சிங்கள பௌத்த பேரின்வாதிகளைப் பொறுத்தவரைக்கும் மலையகத் தமிழர்களின் இனரீதியாக வளர்ச்சியை அங்கீகரிக்க மறுத்துவருவது ஆச்சரியமான ஒன்றல்ல. ஆனால் இந்நாட்டின் இடது சாரிகள் என தங்களை அழைத்துக் கொள்ளும் பாரம்பரிய இடது சாரிகளும், தம்மை புதிய இடதுசாரிகள் என அழைத்துக் கொள்வோரும் கூட மலையகத் தமிழர்களின் இன ரீதியான வளர்ச்சியை அங்கீகரிக்க மறுக்கின்றார்கள் அல்லது தாங்கள் என்றாவது ஒரு நாள் நடத்தப்போகும் புரட்சி வரும் வரையில் மலையகத் தமிழர்களை காத்திருக்கச் சொல்கின்றார்கள். தென்னிலங்கை அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் நவசமசமாஜக் கட்சியையும், சில புரட்சிகர குழுக்களையும் தவிர ஏனைய அனைத்து அரசியல் நிறுவனங்களும் மலையகத் தமிழர்களை பற்றிய விஞ்ஞானபூர்வமான ஒரு கண்ணோட்டத்தை மேற்கொள்வதற்கு பிடிவாதமாக மறுத்து வருகின்றார்கள்.

எனினும் வரலாறு மலையகத்தின் பிற்போக்கு சந்தை தலைமைக்கும், சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளிற்கும் தம்மை திருத்திக் கொள்வதற்காக கால அவகாசம் தரப் போவதில்லை. அதே போல் வேடதாரி இடதுசாரிகளிற்காகவும் அல்லது அவர்களது புரட்சிக்காகவும் காத்திருக்கப் போவதில்லை. மலையகத்திலே புதிய காற்று வீசத்தொடங்கிவிட்டது. மலைநாட்டில் மாற்றம் ஆரம்பமாகிவிட்டது. மலையகத்தின் அரசியல் எதிர்பார்ப்புக்களை முன்னெடுத்துச்செல்லமுடியாத பாரம்பரிய தொழிற்சங்க தலைமை வீழ்த்தப்படும் தருணம் நெருங்கிவிட்டது. இதற்கான அறிகுறிகள் மலையகத்திலே இன்று தெளிவாகத் தெரிகின்றன.

மலையகத்தின் புதிய தலைமுறை அரசியல் தலைமை மலையக பிரதேசத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களை வழிநடத்த வேண்டிய அதே வேளையிலே மலையகத் தோட்ட வரம்புகளிற்கு வெளியே சென்று வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக இந்திய வம்சாவளி மக்களுக்கும் ஒரு தலைமையை தரவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. இத்தகைய இனரீதியான உறுதியான அரசியல் தலைமை இதுவரை இல்லாததால் தென்னிலங்கையின் பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் இன்று வேறுவழியின்றி தமது அரசியல் எதிர்பார்ப்புக்களுக்காக பேரினவாத கட்சிகளை நாட வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த பேரினவாத தலைமைகளை நாடும் நமது மக்கள் காலக்கதியில் தங்களது தனித்தன்மையை இழக்கின்றார்கள். வீட்டு மொழியாகவும், பாடசாலை மொழியாகவும் சிங்களத்தையே பேசவும் படிக்கவும் செய்கிறார்கள். உடப்பு முதல் நீர்கொழும்பு வரையிலான பிரதேசங்கள், வடமேல், வடமத்திய, தென், சப்பிரகமுவ மாகாணங்களிலும் மேல் மாகாணத்தில் கம்பஹா, களுத்துறை மாவட்டங்களிலும் இத்தகைய இனம் மாறிய தமிழர்களின் தொகை இலட்சக்கணக்கில் உள்ளது. இந்நிலைமையை தடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படாவிட்டால், இன்னமும் பத்து வருடங்களில் மத்திய மலைநாட்டில் மாத்திரம் ஒரு சிறு தொகை தமிழ் பேசுபவர்கள் எஞ்சுவார்கள். தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்வதற்காக செல்லும் தமிழர்கள் தங்களது தனித்துவத்தை படிப்படியாக இழப்பார்கள். மலைநாட்டையும் பேரினவாதிகள் விட்டுவைக்கப் போவதில்லை. இந்நிலையில் தென்னிலங்கையிலே தமிழர்களின் அரசியல் பலம் கணிசமாக குறைந்துவிடும். இதை தடுத்து நிறுத்துவது மலையக தமிழர்களின் அரசியல் தலைமை முன் இன்றுள்ள மிகப் பாரிய பணிகளில் ஒன்றாகும்.

மலையகத் தமிழ் மக்களின் தேசிய அரசியல் தலைமையானது இந்நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கும் சிங்கள, ஈழத் தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களின் முற்போக்கு ஜனநாயக அரசியல் தலைமைகளுடன் கைகோர்த்துக் கொண்டு செல்வதன் மூலமாகவே இந்நாட்டிலே ஒரு நீதியும் சமத்துவமிக்க சமுதாயத்தை உருவாக்க முடியும். அதே போல் உருவாகும் புதிய இலங்கையிலே ஏனைய சகோதர இனத்தவர்களுடன் சமானமான அந்தஸ்த்தையும் பெற முடியும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## நாடெங்கும் போராட்ட அலைகள்

மக்களின் கோபம் எல்லை தாண்டுகிறது என்பதை உணர்ந்துள்ள சமசமாஜக் கட்சித் தலைவர் பற்றி வீரக்கோனும், கம்யூனிஸ் கட்சி தலைவர் ராஜா கொல்லுரே போன்றவர்களும் குனிந்த தலையுடன் இப்போராட்டத்தில் பங்கெடுத்தனர். நாட்டை விற்காதே, தீர்வை முன்வை, யுத்தம் வேண்டாம் என்பதே மக்களின் இன்றுள்ள நிலைப்பாடாகும்.

3.4.2000 அன்று 2000 மேற்பட்ட புகையிரத தொழிலாளர்கள் யுத்தத்தை நிறுத்து, தனியார் மயத்தை ஒழி, என்று கோரி கண்டனத்துடன் கூடிய மறியல் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

காணாமல் போன படைவீரர்களின் உறவினர்கள், அரசு அனுமதித்தாலும் இல்லாவிட்டாலும் தாம் வன்னிக்கு செல்லப்போவதாக சூளுரைத்துள்ளனர். இதற்காக வவுனியாவில் அலுவலகம் ஒன்றை திறப்பதற்கும் முடிவு செய்துள்ளனர். வடக்கிலே சமாதானத்தை வலியுறுத்தி 10,000 மக்கள் கண்டனப் பேரணியை நடத்தியுள்ளனர். கிழக்கிலும் பாஸ் நடைமுறை, காணி சுவீகரிப்பு போன்றவற்றை கண்டித்து ஆயிரக்கணக்கான மக்கள் ஊர்வலம் நடத்தியுள்ளனர். கொழும்பு மாநகரம் எங்கும் போராட்ட அலைகளே தென்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com





# தேசத் துரோகம்

எப்பாவலவிலுள்ள இந்நாட்டு விவசாயிகளுக்கு நூற்றாண்டு காலமாக உபயோகப்படுத்தக்கூடிய பொசுப்பேற் படிவினை பல்தேசிய கம்பனியொன்றுக்கு ''வெள்ளித் தட்டத்தில் வழங்குவதற்கு சந்திரிகா அரசாங்கம் திட்டியுள்ள திட்டமானது அப்பட்டமான நாட்டுத் துரோகம். இதனால் வடமத்திய மாகாணமே விலைபோகிறது. இதனை எதிர்க்கும் மக்கள் எழுச்சி கொழும்பில் 30.3.2000ம் திகதி இடம்பெற்றது. இது சம்பந்தமாக விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரமே இதுவாகும்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ்/ முஸ்லிம் பெரும்பான்மை மக்களின் நில உரிமையை ஏற்க மறுத்து இரத்த ஆறுகளை ஓடச் செய்து கொண்டிருக்கும் அரசாங்கம். சிங்கள மக்கள் செறிந்து வாழும் வட மத்திய மாகாணத்தை பல்தேசிய கம்பனிக்கு தாரை வார்ப்பதானது அன்று ஒல்லாந்தர் காலத்தில் கிழக்கிந்திய கம்பனியின் நிர்வாகத்தில் இலங்கையில் பல்வேறு பகுதிகள் கொண்டு வரப்பட்டதையே ஞாபகப்படுத்துகிறது. எனவே அரசாங்கத்திற்கு தமிழ் / முஸ்லிம் மக்களின் அபிலாசைகளில் மட்டுமன்றி சாதாரண சிங்கள மக்கள் நலன்களிலும் அக்கறை கிடையாது என்பது நிதர்சனம். எனவே, தொடரவேண்டிய நில உரிமைப் போராட்டங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு கைகோர்த்து நிற்பது அவசியமாகிறது.

எதிர்வரும் மார்ச் 30ம் திகதியன்று பல்வேறு தொழிற்சங்களினதும், பெண்கள், விவசாயிகள், சமய, மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கான குழுக்கள் உள்ளிட்ட அரசாங்க சார்பற்ற அமைப்புக்களினதும் அங்கத்தவர்கள் கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு எதிரே ஒன்று கூடுவர். உத்தேச எப்பாவல பொசுபேற்று விற்பனைத் திட்டத்திற்கு தமது ஒன்றுபட்ட எதிர்ப்பினையும், கல்கந்த புராண விகாராதிபதி மகமங்கடவெல பியரத்ன தேரோவின் தலைமையின் கீழ் நடைபெறுகின்ற எப்பாவல மக்களின் போராட்டத்திற்கான தமது ஆதரவையும் அவர்கள் இந் நடவடிக்கை மூலம் வெளிக்காட்டுவர்.

எப்பாவலவிலுள்ள றொக் பொசுபேற்றுப்படிவினை உபயோகிப்பதன் மூலம் ஏற்றுமதிக்கான பொசுபேற்று உரத்தினை உற்பத்தி செய்வதற்காக 'ஐஎம்சீ குளோபல்' மற்றும் 'பிறீபோட் மக்மோறன் றிசோஸ் பாட்னர்ஸ்'' கூட்டிணைந்து உருவாக்கப்பட்ட அமெரிக்காவில் நிலைகொண்டுள்ள 'ஐஎம்சீ அக்றிக்கோ' எனும் பல்தேசியக் கம்பனியினதும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'டோமன் கோர்ப்பரேசனினதும்' தலைமையிலுள்ள கம்பனிகளின் கூட்டிணைந்த நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ள உடன்படிக்கையினை, எப்பாவல மக்களின் எதிர்ப்பினையும் பொருட்படுத்தாமல் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வது போல் தோற்றுகின்றது.

றொக்பொசுபேற்று தோண்டும் நடவடிக்கையினால் ''ஆய்வுப் பிரதேசம்'' எனக் குறிப்பிட்டுள்ள 56 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பிலுள்ள 28 கிராமங்களில் வசிக்கின்ற 2500 குடும்பங்களைச் சேர்ந்த 12,000 மக்கள் இடம் பெயர நேரிடும். அம்மக்களும், அவர்களின் மூதாதையினரும் பல நூற்றாண்டுகளாக விவசாயம் செய்து வந்த நிலங்களும் அவற்றைச் சூழவுள்ள காடுகளும் இந் நடவடிக்கையினால் சீரழிய நேரிடும். புராண காலத்தைச் சேர்ந்த கலாவேவ-ஐகங்கை நீர் மற்றும் மண் பாதுகாப்புத் திட்டங்களும், அந்நிலங்களில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளுக்கு ஆதாரமாகவுள்ள மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தின் பகுதிகளும் இதனால் அழிவுக்குள்ளாக நேரிடும். குறிப்பிட்ட முழு நிலப் பிரதேசத்திலும் அதன் சுற்றாடலிலும் மீண்டும் சீர் செய்ய முடியாதவாறான சூழல் மாசடைதலையும், சுற்றாடல் பாதிப்பினையும் ஏற்படுத்துவதுடன், புராண தலைநகரான அநுராதபுர நகர் வரையிலான பல புராண கோவில்களும், பெருமதிப்புள்ள தொல்பொருள் ஆய்வுப் பிரதேசங்களும் அழிவினை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

இத்திட்டமானது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைக்குடாவை அண்டியுள்ள 450 ஏக்கர் நிலப் பரப்பொன்றில் பொசுபோரிக் அமிலத் தொழிற்சாலையொன்றினதும் சல்பூரிக்கமிலத் தொழிற்சாலையொன்றினதும் நிர்மாணித்தலை உள்ளடக்கியுள்ளது. மெய்சிலிர்க்க வைக்கும் அழகினைக் கொண்டுள்ள திருகோணமலைக்குடாவின் மென்மையான சுற்றாடல் கட்டமைப்பினை உருவாக்கும் மாசற்ற பசுந்தாவரங்களும், அப்பிரதேசத்திற்கேயுரித்தானதும், அருகிவருகின்றதுமான இனங்களையுள்ளடக்கியதான வளமிக்க கரையோர, மற்றும் ஏரிகளடங்கிய சுற்றாடல் கட்டமைப்புக்களும் பொசுபேற்று தயாரித்தலின் தீங்கிழைக்கும் தன்மை காரணமாக அழிவுக்குள்ளாக நேரிடும்.

உத்தேச திட்டத்தின் முக்கியமான பங்காளர்களில் 'பிறீபோட் மக்மோறானும்' ஒன்றாகும். அபகீர்த்தியடைந்துள்ள இக் கம்பனியானது அமெரிக்காவிலேயே ''உலகின் மிகக் கேவலமான சூழல் மாசு ஏற்படுத்துகின்ற நிறுவனம்'' எனக் கண்டனம் பெற்றதொன்றாகும். உலகின் மிகப் பெரிய செப்பு மற்றும் தங்கப் படிவுகளின் தோண்டுதலுக்கான உரிமையை இக்கம்பனி பெற்றுள்ள இந்தோனேசியாவின் 'இரியன் ஜயா' எனும் மாகாணத்தில் பெருஞ் சுற்றாடல் பாதிப்பினையும், மனித உரிமை மீறல்களையும் ஏற்படுத்தியுள்ளதாக 'பிறீபோட் மக்மோறன்' மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. சுரங்கம் தோண்டும் பகுதியைக் காவல் புரிவதற்காக 'பிறீபோட் மக்மோறனினால்' ஊதியம் வழங்கப்படுகின்ற இந்தோனேசிய இராணுவம் சுரங்கத்தை அண்டியுள்ள பகுதிகளில் ஏறக்குறைய 2000 மக்களைப் படுகொலை செய்துள்ளதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

'பிறீபோட்'டின் ஈவிரக்கமற்ற வியாபார நடவடிக்கைகள் பற்றித் தற்போது இந்நாட்டில் நன்கு அறிந்துள்ளமையால் 'டுஎம்சீ குளோபல்' மற்றும் 'பிறீபோட் மக்மொறான் ரீசோர்ஸ் பாட்னர்ஸ்' ஆகியவற்றின் கூட்டிணைவினால் ஏற்பட்ட நிறுவனமாகிய போதிலும், 'பிறீபோட்'டுடன் தமக்கு எவ்வித தொடர்புமில்லை எனக் காட்டுவதற்கு 'ஐஎம்சி அக்றிக்கோ' மிகுந்த பிரயத்தனம் மேற்கொள்கின்றது. எவ்வாறிருப்பினும், பொசுபேற்றுத் திட்டம் மீதான எப்பாவல மக்களின் எதிர்ப்பானது 'பிறீபோட் மக்மோறன்' மீது ஏற்பட்டுள்ள கெட்ட பொதுசன அபிப்பிராயத்தினால் மாத்திரமன்றி, அத்திட்டமே தீங்குவிளைவிப்பது என்பதனாலாகும்.

'ஐஎம்சீ அக்றிக்கோ'வினதும், அதன் பங்காளிகளினதும் திட்டம் நிறைவேறுமாயின், முப்பது வருட காலத்தினுள் எப்பாவலவிலுள்ள பொசுபேற்றுப் படிவு முற்று முழுதாகத் தோண்டப்பட்டு, உபயோகிக்கப்பட்டு வெறுமையாக்கப்பட்டு விடும். பல பில்லியன் அமெரிக்கன் டொலர்கள் அளவில் அவர்களால் இலாபமீட்ட முடியுமெனக் கணிப்பிடும் அதேவேளையில், சிறீலங்காவுக்கு ஒரு சிறு தொகையே கிடைக்கும்.

இத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்ற இரு அதிமுக்கியமான அரசாங்க நிறுவனங்களாகிய முதலீட்டுச்சபை, மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றினால் பிரச்சாரம் மேற்கொள்வது போன்று, எப்பாவல பொசுபேற்றுத் திட்டமானது ஒரு ''முதலீடு'' அல்லது ''அபிவிருத்தி'' எனக் கருதவியலாது. பொருளாதார ரீதியில் நோக்கின் இத்திட்ட... மீளப்பெற முடியாத இயற்கை மூல வளமொன்றின் முற்றுமுழுதான சூறையாடலைத் தவிர வேறொன்றுமில்லை. தேசிய விஞ்ஞான நிறுவனத்தைச் சேர்ந்த உள்நாட்டு விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளவாறு இவ்வியற்கை மூலவளமானது மனித, மற்றும் சுற்றாடலுக்கு ஏற்புடையதான, நீண்டகால அடிப்படையிலான உபயோகத்தின் மூலம் பலநூற்றாண்டுகளுக்குப் பாதுகாக்கக் கூடியதாகும்.

'பிறீபோட் மக்மோறான்' அல்லது 'ஐஎம்சீ அக்றிக்கோ'வும் அதனுடைய பங்காளர்களும் எப்பாவலவில் காலடி எடுத்து வைப்பது தடுக்கப்பட வேண்டும். பல கோடிக்காணக்கான டொலர்கள் சம்பந்தப்பட்டிருப்பதனால், ஜனாதிபதியும், சிறீலங்கா அரசாங்கமும் 'எது வரினும்' இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இணங்குவதற்காக தூண்டப்படுகின்றார்கள். மக்களுக்குச் சொந்தமான நாட்டு வளத்தினைத் தாரை வார்ப்பதற்கு எந்தவொரு அரசாங்கத்திற்கும் உரிமையில்லை என்பதுடன் மக்கள் விருப்பதற்கு எதிராக அவ்விதம் செய்வது என்பது துரோகத்தனத்திற்கு இணையானது என்ற போதிலும், எப்பாவல மக்களின் விருப்பிற்கேற்ப இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதை அவர்கள் நிறுத்துவார்கள் என நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது.

எப்பாவல மக்கள் வசிக்கின்ற மண்ணின் கீழுள்ள பொசுபேற்றுப் படிவினையும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக அவர்கள் விவசாயம் செய்து வந்த நிலங்களையும் பறித்தெடுப்பதற்காக, எப்பாவல மீதும் அதன் மக்கள் மீதும் பல் தேசியக் கம்பனிக் கழுகுகள் வந்திறுங்குவதைத் தடுப்பதற்கு வெகுசன எழுச்சியொன்றுக்கான அச்சுறுத்தல் மூலம் மாத்திரமே இயலும்.

முதற்படியாக, மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகவும், எமது மக்களின் மூல வளங்களையும் சுற்றாடலையும் பாதுகாப்பது தொடர்பாகவும் அக்கறையுள்ள சகல மக்கள் பிரிவினரையும் மார்ச் 30ம் திகதி மக்கள் நடவடிக்கையுடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம்.

**எப்பாவல மக்களின் வாழ்க்கையும்**
**சுற்றாடலையும் பாதுகாப்போம்!**

**எமது நாட்டு மூலவளங்கள்**
**சூறையாடப்படுவதை நிறுத்துவோம்!**

**மக்கள் துரோகிகளைத்**
**தோற்கடிப்போம்!**

-மார்ச் 30 மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைக்கான அமைப்புக் குழு,

(11ம் பக்கத் தொடர்ச்சி)

## மலையக மக்களின் ...


மடிப்பு கலையாக அங்கிகளுடன் வலம் வரும் இத்தலைவர்களே மலையக மக்களின் அழிவுக்கு காரணமானவர்களாக உள்ளனர்.

வடக்கு கிழக்கு மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தியும், தாம் அரசுடன் ஒட்டியிருப்பது எவ்வளவு இராஜதந்திரம் என்றும் தம்மைத் தாமே புகழ்ந்த இந்த தலைவர்கள் இன்று மலையக மக்களின், சனத்தொகை வீழ்ச்சிக்கு என்ன சமாதானம் சொல்லப் போகின்றார்கள். தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக கையை உயர்த்த போகின்றார்களா?

www.padippakam.com



# நுரைச்சோலை அனல் மின்நிலைய திட்டம் உறுதியாகிறது



வடமேல் மாகாணத்தில் உள்ள நுரைச்சோலையில், அனல் மின் நிலையம் அமைப்பதற்கு அரசு எடுத்து வந்த முயற்சிகள் மக்களினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் கடும் எதிர்ப்பினால் ஒத்திவைக்கப் பட்டு இருந்தது. தற்போது ஜனாதிபதி அவர்கள் மேற்படி திட்டத்தை ஆரம் பிக்குமாறு உந்துதல் வழங்கியுள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிலாபம் பேராயர் நிக்கலஸ் மார்கோஸ் பெர்னாண்டோ, அவர்களுக்கு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது என சந்திரிகா உறுதி வழங்கியிருந்தார். தேர்தல் வாக்குறுதி கள் காற்றில் பறப்பது தானே என்ற போக்கில் தற்போது இத்திட்டம் அமுலுக்கு வருகின்றது. இந்த திட்டம் அமுல்படுத்தப்படும் போது பெரும் எண்ணிக்கையான மீனவ குடும் பங்களும் விவசாயிகளும் இப்பகுதி களில் இருந்து வெளியேறி நடுத்தெரு வில் நிற்கும் நிலை தோன்றியுள்ளது.

சூழல் சுற்றாடல் மாசடைதல் என்பது உலகம் முழுவதையும் அச்சுறுத்தி வரும் பிரச்சனையாகும். சுற்றாடல் மாசடைதலை தடுக்க பல்வேறுபட்ட போராட்டங்கள் உலகில் நடைபெற் றுக் கொண்டே இருக்கின்றன. ஐரோப் பிய நாடுகள் இதற்கு எதிராக ஆக்க பூர்வமான தற்பாதுகாப்பு நடவடிக்கை களை எடுத்து வருகின்றன.

வளி மண்டலத்தில் ஏற்பட்டுள்ள அபாயத்தால் இயற்கையே இயமனாக மாறியுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் சுற்றாடல் பாதிப்புக் களினால் ஏற்பட்டவை என்றே விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர்.

இலங்கையில் தனியார் மயப்படுத்தல் துரிதகதியில் நடைபெறுவதால், சுற்றாடல் மாசடைதலும், துரிதகதியில் மேம்பட்டு வருகிறது. இந்துக்கள் போற்றும் கதிர்காமம் மாணிக்க கங்கை இன்று பெல்வத்தை சீனித் தொழிற் சாலை இரசாயனக் கழிவுகளால் அசுத்தமாகியுள்ளது. வரலாற்று புகழ் மிக்க கண்டி குளத்தில் உள்ள மீன்கள் தினமும் செத்து மிதக்கின்றன. பௌத்த துறவி ஒருவர், அமெரிக்க கழிவுகளை இரணவெல பகுதியில் புதைப்பதற்கு அனுமதி கொடுத்ததால், அப்பகுதி இன்று பெரும்பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளது.

நுரைச்சோலைப் பகுதி மேற்படி திட்டத்திற்கு பொருத்தமற்றது என பல வெளிநாட்டு நிறுவனங்கள் தெரிவித் திருந்தன. இருந்த போதும் இங்கே இத்திட்டத்தை அமுல்படுத்தியே தீருவோம் என்பதில் சிலர் கருத்தாக உள்ளதாக தெரிகிறது. இதற்கு ஏதும் அரசியல் பின்னணி உள்ளதா என்ற சந்தேகமும் மக்கள மனதில் வலுப் பட்டு வருகிறது.

உண்மையில் உலகவங்கியின் உத்தரவு களுக்கு அச்சொட்டாக அடிபணிந்து நிறைவேற்றும் அரசாங்கம், அதற்காக இன, மத வேறுபாடின்றி மக்களை உதைக்கத் தயாராயுள்ளதென்பதை, சிங்கள பௌத்த பேரினவாதிகளால் ஏன் உணர முடியவில்லை? அது இனவெறியும் வர்த்தகநலமும் கொண்டதல்லவா?

# வரலாறு திரித்து எழுதப்படுகிறது

பாடப்புத்தகங்கள் தொடர்பான கயிறு இழுப்பு தொடர்கிறது. வெற்றியீட்டிய வர்களே வரலாற்றை படைக்கின்றார்கள் என்பது பழமொழி. ஒரு பல்லின நாட் டில் வரலாறு மற்றும் மொழி சர்ச்சைக் குரிய விடயங்களாக வந்து ஒவ்வொரு சமூகமும் தத்தம் நோக்கு நிலையிலும், நலனிலும் இருந்து கருத்துக்களை முன் வைக்கும் போது பிணக்குகள் ஏற்படு வது புதிய விடயமல்ல. இந்த வகையில், சிங்கள பாடப்புத்தகங்களில் சில வரலாற்று நிகழ்வுகள் உள்ளடக்கப்படா மையும், தமிழ் பாடப்புத்தங்களில் சிங்கள சொற்கள் சேர்க்கப்பட்டமை யும், வரலாறு மற்றும் கல்வி முறை ஆகிய இரு விடயங்களிலும், பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

தமிழில் ஆண்டு 7 ஆண்டு 10 ஆகிய இர ண்டு வகுப்புக்களுக்குரிய பாடப் புத்தகங்களையும் ஆண்டு 9 சிங்கள பாடப்புத்தகங்களையும் பார்ப்போம். சிங்கள சார்பு குழுக்கள் இலங்கையின் வரலாற்றில் மூன்று முக்கியமான நிகழ்வுகளை விட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேல் குற்றம் சுமத்துகின் றன. மறுபுறத்தில் தமிழ் ஆசிரியர் சங்கம் மொழியை திரித்தும், சிங்கள பாடப் புத்தகங்களை தமிழில் மொழி பெயர்க் கும் போது இலக்கண பிழைகளை விட் டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது. கல்வி வெளியீட்டுத் திணைக்களமும், தேசிய கல்வி நிலையமும் ஒன்றை ஒன்று இவ்விடயங்களில் குறை கூறுகின் றன. புத்தகத்தை எழுதும் பணியில் வெளியீட்டுத் திணைக்களத்திற்கு மொழி பெயர்ப்பாளர்களை தேசிய கல்வி நிலையமே அனுப்பி இருந்தது. மொழி பெயர்ப்பை செய்ய இயலாதவர் களை ஈடுபடுத்தும் பொழுது இத்தகைய பிரச்சினைகள் எழும் என்பதை இப் போது அதிகாரிகள் ஏற்றுக் கொள் கிறார்கள்.

ஆண்டு 7, ஆண்டு 10, தமிழ் சமூகக் கல்வி புத்தகங்களில் பொக்குன என்ற சிங்கள சொல், குளம் என்ற தமிழ் சொல்லுக்கு பதிலாக போடப்பட்டுள்ளது. தமிழ் ஆசிரியர்கள் இன்னொரு அப்பட்டமான தவறையும் சுட்டி காட்டியுள்ளார்.

அதாவது, என்ன என்பதை குறிக்கும் மொக்கத என்ற சொல் அப்படியே எழுதப்பட்டுள்ளது. இதற்கு கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் அபயநாயக்க தரும் விளக்கம் நகைப்புக் கிடமாக இருக்கிறது. அதாவது 28 மில் லியன் புத்தகங்களை அச்சிட்டு வெளி யிடுவது பெரிய விடயம் எனவே இங்ங னம் பிழை ஏற்படுவதை பொறுக்க வேண்டும் என்றுள்ளார்.

தமிழ் பாடப்புத்தகங்களில் உள்ள பிழைகள், சொற்கள் மீதான குழப்பம் என்று அபயநாயக்க சொல்லுகிறார். அதாவது யாழ்ப்பாண தமிழர்களும், மலையக தமிழர்களும் வெவ்வேறு உச்ச ரிப்புகளே பாவிக்கின்றார்கள், இதனால் தான் இந்த குழப்பங்கள் தோன்று கின்றன என்றுள்ளார்.

தமிழை பொறுத்தவரை தமிழ்நாடு, வட க்கு கிழக்கு, மலையகம் என்ற பேதம் கல்வியில் ஒருபோதும் ஏற்பட்ட தில்லை. அபநாயக்கா போன்ற இன வாதிகள் முரண்பாடுகளை தோற்றுவிக்க தற்போது கங்கணம் கட்டுகின்றார்கள்.

இப்பாட நூல்கள் மொழி பெயர்ப்புக் காக பெருந்தொகை அள்ளி வழங்கப் படுகிறது. ஒரு பக்கம் மொழி பெயர்க் கப்படுவதற்கு ரூபா 200/=ம் ஒப்பு நோக்குவதற்கு பக்கத்திற்கு ரூபா 25/=ம் வழங்கப்படுகிறது.

மேற்படி விடயங்களை வைத்து தமிழ் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மகா சிவம் பெரும் கண்டன கணைகளை கல் வித் திணைக்களத்தின் மீது சுமத்தி யுள்ளார். அதாவது பௌத்தம் சம்பந்த மாக பாடப்புத்தகங்களில் அதிக பக்கங் களை வழங்கும் கல்வி அமைச்சு, ஏனைய மதங்களுக்கு ஒரு சில பக்கங்களை மட்டுமே வழங்கியுள்ளது. அத்துடன் விஜயன் இலங்கைக்கு வந்த முதல் பிரசையாக பாடப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகப் பெரியதொரு வரலாற்று தவறாகும் என் றும் மகாசிவம் குறிப்பிட்டிருக்கிறார்.

கல்வித் திட்டத்தினூடாக தமிழ் மக்க ளின் மொழியையும், வரலாறையும் இன வாதிகள் திரித்துக் கூற முற்பட்டுள்ளனர்.

இது நீண்ட காலமாக நடைபெற்று வரும் நிகழ்வாக இருக்கிறது. இதை தொடர்ந்து போக அனுமதிக்க கூடாது. இதற்கெதிராக வலிமையான போராட் டங்களை நாம் நடத்த வேண்டும்.

# கதிர்காமத்தானின் மாணிக்க கங்கையும் கலப்படமாகிறது



பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நீரா டும், புனித கங்கை, 50 மேற்பட்ட கிரா மங்களைச் சேர்ந்த 2000 மேற்பட்ட குடும்பங்கள் உணவு சமைப்பதில் இருந்து குளிப்பது வரை பாவிக்கப் படும், இவ் ஆற்றுநீர் இன்று, அசுத்த மாகியுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 18ம் திகதி, பெருமளவு இரசாயனக் கழிவுகள் மாணிக்க கங்கையில் விடப்பட்டுள்ளன.

பெருந்தொகையான மக்கள் மாத்திரம் இக்கங்கை நீரை பாவிப்பதில்லை. பெரு மளவு கால்நடைகளும், குறிப்பாக காட்டு மிருகங்களும், இந்நீரை அருந்தி வரு கின்றன. கடந்த வருடம் மொன்றாகல நீதிமன்றம், இங்ஙனம் நீரை ஆற்றுக்குள் திறந்துவிடக் கூடாது என கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால் சீனித்தொழிற்சாலை நிர்வாகம் நீதிமன்ற உத்தரவை உதாசீனப்படுத்தும் விதத்தில் நடந்துள்ளது. மொன்றாகல நீதிவான் சீனித்தொழிற்சாலையை பார்வையிடச் சென்றபோது மேற்படி கழிவுகள் வெளியே விடப்படமாட்டாது என நிர் வாகிகள் தெரிவித்துள்ளனர். நீதிவான் அவ்விடத்தை விட்டு சென்றவுடன் கழி வுத் தொகுதி திறந்து விடப்பட்டுள்ளது. இதேவேளை பெலவத்தை சீனித் தொழிற்சாலை, நிர்வாகம் தாம் அப்படி செய்யவில்லை என மறுப்புத் தெரிவுத் துள்ளது. 18/2/2000ல் திறந்து விடப்பட் டது. ஒரு விபத்து என்றும் கூறியுள்ளது.

இத்தகைய இரசாயன கழிவுகளைக் கொண்டு கசிப்பு உற்பத்தி செய்வதிலும் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. தேசிய சொத்தை விற்றல், தேசிய சொத்தை அசுத்தமாக்கல் இன் றைய உலகில் சாதாரண விடயமாகி விட்டது. நைஜீரியா நாட்டில் எண்ணைக் கழிவுகளால் அந்நாட்டு வறிய மக்கள் வாழ முடியாத நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். இதே போன்று உலகின் பல பாகங்களிலும் உள்ள வறிய நாடுகள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர் நோக்குகின்றன. குறிப்பாக சூழல் மாசு அடைவதைத் தவிர்ப்பதற்கு வறிய நாடுகள் பெருமளவு முயற்சிகளை மேற் கொண்டாலும், அது பலன் அளிப்பதாகத் தெரியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com





# ஐரோப்பாவில் ஹிட்லரின் ஆசை நிறைவேறப் போகிறதா?

**டென்மார்க் பாராளுமன்ற உறுப்பினரும் நவசமசமாஜக் கட்சி அங்கம் வகிக்கும் 4வது அகிலத்தின் பிரதிநிதியுமான தோழர் சோரன் கொன்காட் 05.03.2000 அன்று தோழர் அண்ணாமலை கேட்போர் கூடத்தில் ஆற்றிய உரையில் இருந்து எழுதப்பட்டது.**

ஐரோப்பிய முதலாளித்துவம் நீண்ட காலம் நிலைபெற்று இருக்கின்றது. புதிய அரசு ஒன்றை உருவாக்க முடியாத சூழ்நிலை அங்கு காணப்படுகின்றது. ஐரோப்பா ஒரு அரசாக விளங்க வேண்டும் என்பதே ஐரோப்பிய முதலாளித்துவத்தின் விருப்பமாக உள்ளது. இதற்கு எதிராக போராடுவது என்பது மிகக் கடினமான பணியாகும். அத்துடன் புரட்சி என்பது எழிதான விடயமல்ல.

இன்று ஐரோப்பிய முதலாளித் துவத்துக்கு, சவாலாக இருப்பது அமெரிக்காவும் ஜப்பானுமே. இவ் இருநாடுகளுக்கும் எதிராக ஐரோப்பிய நாடுகள் போரா வேண்டிய நிலையில் உள்ளன. இதேவேளை ஐரோப்பிய நாடுகள் பதினைந்துக்கு மேற்பட்ட அணிகளாக பிரிந்து கிடக்கின்றன. பிரித்தானியா அமெரிக்காவுடன் உறவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமாக உள்ளது. ஜேர்மனி கிழக்கு நாடுகளுடன் தொடர்பை வலுப் படுத்துகிறது. பிரான்ஸ் ஆபிரிக்க நாடுக ளுடன் உறவாடிக் கொண்டிருக்கின்றது. இவற்றில் இருந்து ஐரோப்பிய நாடு களுக்கு இடையே இருக்கின்ற முரண் பாடுகளை நாம் உணர்ந்து கொள்ள லாம். எம்மைப் பொறுத்தவரையில், ஐரோப்பா ஒரு அரசாக வரும் என்பது முடியாத காரியம் என்றே கூறுவோம்.

ஐரோப்பாவை ஒரு அரசாக கொண்டு வரும் முயற்சியில் முதலாளித்துவத் திற்கு சில வெற்றிகளும் கிடைத்து இருக்கின்றன. 1986ல் ஐரோப்பிய யூனியன் என்ற ஒரு சந்தை உருவாக் கப்பட்டுள்ளது. இதற்குரிய சட்ட திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1999ல் (யூரோ) பொது நாணயத்தை வெளியிடுவதில் வெற்றி கண்டுள் ளனர். ஒரு வருடத்தின் பின்பு ஐரோப் பாவில் பல நாணய புழக்கம் இல்லாது போய்விடும். ஐரோப்பிய அரசு உருவா வதற்கு நிதி அதிகாரம், அரசியல் அதிகாரம் ஆகிய இரண்டும் தேவைப் படுகின்றன. அதேவேளை பொது பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பொதுவான ஒரு இராணுவத்தை உருவாக்குவதற்கு உரிய முயற்சிகள் நடைபெறுகின்றன. இதற்கான சிபார்சு களை சமர்ப்பிக்கும்படி நிபுணத்துவம் மிக்க ஒருவரை நியமித்தும் உள்ளனர்.


எதிர்காலத்தில் அமெரிக்க உதவி இல்லாமல் ஐரோப்பா மட்டும் தனித்து யுத்தங்களை நடத்தவே. ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. இங்கனம் இராணுவம் சம்பந்தமான விடயங்கள் மேலோங்கி வருவதால், எதிர்காலத் தில் ஐரோப்பிய நாடுகளுக்கு இராணு வச் செலவு மிகப் பெரிய அளவில் அதிகரிக்கப் போகின்றது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பின்பு எதிர் காலத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு இராணுவச் செலவு குறையும் என்றே பலராலும் பேசப்பட்டது. ஆனால் இன்று ஐரோப்பிய நாடுகளின் இரா ணுவச் செலவு மீண்டும் பல மடங்கு அதிகரிக்கப் போகிறது.

இன்று ஐரோப்பிய முதலாளித்துவம் ஐரோப்பா என்ற பொது அடையா ளத்தை நிலை நிறுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கான முயற்சியாக ஐரோப்பிய கொடி ஒன்றை தயாரித்துள்ளனர். இக்கொடி நீல நிறத்துடன் மஞ்சள் நிற நட்சத்திரங்களுடன் காணப்படுகின்றது. இவர்களின் தற்போதைய போக்கை அவதானிக்கும் போது ஐரோப்பாவுக்கு வெளியே இருக்கும் எல்லா மக்களை யும் எதிரிகளாகவே இவர்கள் கணிக்கப் போகின்றார்கள். இத்தகைய போக்கு களால் இன்று ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அடிப்படை வாதம் பரவி வரத் தொடங்கி உள்ளது. இவற்றிற்கு உதாரணங்களாக செங்கன் உடன் படிக்கை பிரித்தானிய விசா கட்ட ணத்தை அதிகரித்தமை, ஆஸ்திரிய ஜனாதிபதி கைடரின் கருத்துக்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

பிரித்தானியா விசா கட்டணத்தை அதிகரித்தன் உள்நோக்கம் மேற்கு இந்திய நாடுகளுக்கு எதிரான நடவடிக் கையாகவே கருதப்படுகிறது. அந்நாடு களின் மக்கள் பிரித்தானியாவுக்குள் வருவதை தடுப்பதே பிரதான நோக்க மாக உள்ளது.

ஆஸ்திரிய ஜனாதிபதி கைடர் பாசிச ரீதியான கருத்துக்களை பேசி வரு கிறார். கட்டாய இராணுவ சேவை போன்றவற்றையும் அவர் வலியுறுத்தி வருகிறார். வேற்றுநாட்டு தொழிலா ளருக்கு எதிரான கருத்துக்களையும் அவர் முன் வைத்து வருகிறார். இத்த கைய போக்கு ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் வெளிநாட்டு தொழிலாள ருக்கு எதிரானதாக இருக்கிறது.

இவை யாவற்றிற்கும் எதிராக போரா டக்கூடிய சக்தி இடதுசாரிகளுக்கு மட்டுமே உண்டு. இன்று பிரான்ஸ், போர்த்துக்கல் நாடுகளில் இடது சாரிகள் வலுவடைந்து வருகின்ற மையால் ஏனைய நாடுகளிலும் இடதுசாரிகள் வெற்றி பெறுவதற்கு, வாய்ப்புக்கள் ஏற்பட்டு வருவதை நாம் காண்கின்றோம். இது புரட்சிவாதி களுக்கு உற்சாகமூட்டும் நிகழ்வுகளாகும்.



# இயமனான மதநம்பிக்கை

மதம் என்பது மாயை. மொழி என்பது போதை.

(கார்ல் மார்க்ஸ்)

கோயிலை நாம் வெறுக்க வில்லை. கோயில் சதிகாரரின் கூடாரமாக இருப்பதையே வெறுக்கிறோம் (பராசக்தி)

மத நம்பிக்கையை துரும்பாக பாவித்து உலகில் பல்வேறு மோசடிகள் இடம் பெற்று வரு கின்றன. இந்தியாவில் கூட அண்மைக்காலமாக கடவுள் என மதிக்கப்பட்ட சாமிமார் களின் சதிகள் பல அம்பலத் துக்கு வந்தன. இலங்கையிலும் மதங்களை பாவித்து பல கொலைகள், கொள்ளைகள், சமூகவிரோத செயல்கள் காலத் துக்கு காலம் இடம் பெற்றே வருகின்றன.

இன்று உகண்டா நாட்டில் நட ந்து இருப்பதோ மனித சமூகத் தின் இரத்தத்தை உறையச் செய் யும் படுபயங்கரமாகும். நூற்றுக் கணக்கான உயிர்கள் மதத்தின் மேல் கொண்ட விசுவாசத்திற் காக கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன.

புத்தாயிரம் நூற்றாண்டில் உல கம் அழியப் போகின்றது, உங்க ளுடைய சொத்துக்களை எல் லாம் எங்களிடம் தாருங்கள் என்று கபடத்தனமாக மதப் பிர சாரத்தைச் செய்து மக்களை மய க்கி உள்ளனர். சதிகாரரின் மோச மான வார்த்தைகளை உண்மை யென நம்பி ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொத்துக்களை இந்த போலி மதகுருக்களிடம் ஒப்படைத்திருந்தனர். 2000 ஆண்டில், சூரியன் உதயம் ஆகும் போது இவ் உலகம் அழி ந்து விடும் என்பதே இவர்கள் கொடுத்த கயிறாகும். 2000 ஆண் டும் வந்தது. சூரியனும் தனது உதயத்தை உலகிற்கு காட்டி யது. மக்களின் மனதில் சந்தே கப் பொறி தட்டியது. கேள்வி கேட்கத் தொடங்கினர். விளைவு, குருமார்களின் வீட் டுச் சுற்றாடலிலும், தேவாலய வளவுகளிலும் பெருங்குழிகள் வெட்டப்பட்டு மக்கள் புதைக் கப்பட்டனர்.

இம்மக்களை கொலை செய்த விதங்களும் அடிவயிற்றை கலக் குவதாக உள்ளது. விசம் கொடு த்து கொல்லப்பட்டதாக ஒரு செய்தியும், இல்லை கைகள் கட்டப்பட்டு, அடித்துக் கொல் லப்பட்டதாக இன்னொரு செய்தியும் கூறுகிறது. சில இடங்களில் தமக்கு தாமே தீமூட்டி எரித்து தற்கொலை செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

உகண்டா நாட்டு பொலிசார் மூக்கில் துணியை பொத்திக் கொண்டு சர்வதேச பொலிசா ரின் உதவியை நாடியுள்ளனர். அப்பாவி மக்களின் சொத்துக் களை சுருட்டிய பல மதத் தலை வர்கள் வெளிநாட்டிற்கு கம்பி நீட்டியுள்ளனர்.

பரமபிதாவின் பத்து கட்டளை களை நிறைவேற்றப் போகின் றோம் எனக் கூறிக் கொண்டே இந்த மத நம்பிக்கை வியாபா ரம் மேடை ஏறியுள்ளது. இந்த அமைப்பின் தலைமைக்குரு ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்தவன். இவனது மனைவி பெயர் போன விபச்சாரி. இந்த விபச்சாரி மூலமே தனது கொடூரங்களை இந்த மதகுரு நிறைவேற்றி உள்ளான். இந்த விபச்சாரியும் தன்னிடம் கட வுள் புகுந்துள்ளார்; அவர் என க்கு கட்டளை இடுகின்றார் என்ற பூக்களை மக்களின் காது களில் கூசாமல் வைத்துள்ளாள். விளைவு பிணக்குவியலாக உக ண்டா நாடு காட்சி அளிக்கிறது. ஏற்கனவே உள்நாட்டு அரசியல் குழப்பங்களினால் உகண்டா நாடு சின்னாபின்னம் ஆகியுள் ளது.

(தொடர்ச்சி பக்கம் 10)

www.padippakam.com






# பிஞ்சு ஒன்று குருவானது

- அமுதா -

இராணுவ வண்டிகளின் இரைச்சல், செல்வீச்சின் அதிர்வு, என்பவற்றுடன் முருகேசு வாத்தியாரின் லொக்கு, லொக்கு என்ற இருமல் சத்தம் இவைக்கு மத்தியில் நந்தன் தன்னைப் பற்றியும் தனது எதிர்காலத்தைப் பற்றியும் யோசித்தவாறு படுத்திருந்தான்.

நேரம் நள்ளிரவை தாண்டிக்கொண்டிருந்தது. நந்தனின் சுவாசம் மற்றும் அசைவுகளைக் கொண்டு நந்தன் இன்னும் நித்திரை கொள்ளவில்லை என்பதை ஊகித்த பார்வதி நந்து ஏன் நித்திரை கொள்ளாமல் இருக்கின்றாய், உந்தச் சத்தங்கள் பத்துப் பதினைந்து வருசமாக கேட்டுக் கொண்டு தானே இருக்குது' உதுக்குக் காது கொடுத்தால் மனுசருக்கு நித்திரை இல்லாத வருத்தம் வந்துவிடும்'' பேசாமல் படு என்று பார்வதி செல்லமாகக் கடிந்தாள். இருமிக் கொண்டிருந்த முருகேசரும் இருமலை அடக்கிக் கொண்டு மகனைப் பார்த்து நந்து ஏன் நித்திரை கொள்ளாமல் இருக்கிறாய் என்று கேட்டார். நான் இருமிறது உனக்கு இடைஞ்சலாய் இருக்கிறது போல் தெரிகிறது. இதுக்குத்தான் நான் தினமும் உன்னிடம் வெளிநாட்டில் இருக்கும் உனது சகோதரங்களிட்ட போய் விடு என்று சொல்லி வருகிறேன். இந்த நாட்டில் இப்போதைக்கு அமைதி வராது'' நீ எங்களுடன் இருந்து உனது வாழ்க்கையை பாழாக்காதே. ஓடித் தப்பு. தகப்பன் வருத்தத்துடன் அவஸ்தைப்பட்டு கூறிய வார்த்தைகளைக் கேட்ட நந்தனுக்கு கோபம் மூக்கின் மேல் வந்துவிட்டது.

கொஞ்சம் பேசாமல் இரண்டு பேரும் இருக்கிறீங்களா நான் வெளிநாடு போவதில்லை என்ற முடிவு உறுதியானது. எனது மனஉறுதியை குலைக்க வேண்டாம். இன்று ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்கின்றார்கள். வயது போன பெற்றோரை இங்கு தவிக்கவிட்டிட்டு நாம் உலகில் எப்பாகத்தில் இருந்தாலும் நிம்மதியாக இருக்க முடியாது.

கடைசி பிள்ளையான நந்தனிடம் முருகேசர் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார் தனது பாசத்தை பக்குவமான வார்த்தைகள் மூலம் ஒரு போதும் வெளிப்படுத்துவதில்லை. கொஞ்சம் அதட்டலாக கோபமாகவே நந்தனுடன் கதைப்பார். இது நந்தனுக்கும் தெரியும். நந்தன் கூறிய வார்த்தைகள் முருகேசருக்கு கோபத்தை கிளறிவிட்டிருந்தது. ஓம் நந்தன் உங்க வெளிநாட்டில் இருக்கிற எங்கட ஆட்கள் எல்லாம் நிம்மதி இல்லாமல் தான் இருக்கினம், அந்தந்த நாடுகளில் கோயில்களைக் கட்டுதுகள் விமர்சியாக திருமண வீடு வைக்கினம், பிறந்த நாள் கொண்டாட்டம் நடத்தினம், உதெல்லாம் நிம்மதி இல்லாமலா வைக்கினம்? சும்மா அலட்டாமல் படு, நீ இங்கே இருந்து அவையள் நடத்திற செக்கிங்கிள பிடிபட்டு தண்ணிவென்னி இல்லாமல் காய். நாங்கள் பெருந்தொகைப் பணத்தை விரயமாக்கி பிறகு உங்களை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வருகிறோம். உங்களை வைத்துக் கொண்டு வயித்தில நெருப்பை கட்டிக் கொண்டு திரிவது போல நாங்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

உந்தக் கதைகளை விடுங்கோ அப்பா. வெளிநாட்டில் இருக்கிற எங்கட சனங்களில் எத்தனை பேருக்கு மனநோய் இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாது. சும்மா கொஞ்சச் சனங்கள் மூளை கெட்டு செய்யிற காரியங்களை வைத்துக் கொண்டு அங்கே தேன் ஓடுது பால் ஓடுது என்று எங்களுக்கு கதை அளக்க வேண்டாம். பத்தாததற்கு எங்களையும் அங்கே தள்ளி விட வேண்டாம். உண்மையாகத்தான் கேட்கின்றேன் நானும் போனால் உங்களை யார் தான் பார்க்கப் போயினம் என்றான் நந்தன்.

உதுக்கே பயப்பட்டனி நந்தன் எங்கள நாங்களே பாத்துக் கொள்ளுவோம் எங்களைப் பற்றி நீ கவலைப்படாதே. அப்படி ஏதன் பிரச்சினை என்றாலும் எங்கட தோட்டக் காணியில் இருக்கிற சுந்தரம் குடும்பம் எங்களுக்குப் போதும். சுந்தரமும் பாக்கியமும் எங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து தருங்கள். நீங்கள் கொஞ்சக் காலத்திற்கு முன்பு சுந்தரம் குடும்பத்தை எங்கட நன்மை தீமைகளில் கலந்து கொள்ள அனுமதிப்பதில்லை. இப்ப ஏன் அதுகளைப் போட்டு கஸ்ட்டப்படுத்தப் பாக்கிறியள்.

முருகேசருக்கு நந்தன் சொன்னது ஆத்திரத்தை மேலும் கிளறிவிட்டது. அவர் கோபத்துடன் சும்மா அலட்டாமல் படு. இங்கே இருந்து கொண்டு ஊர்ப் புதினங்களில் ஈடுபடாமல் போறதிற்கு வழியைப் பார். எங்களுக்கும் நிம்மதியைத் தா. தகப்பனுக்கு மகனுக்குமேயான செல்லச் சண்டை சற்று சூடேறுவதை உணர்ந்த பார்வதி நீங்கள் இரண்டு பேரும் படுக்க மாட்டீங்களா? நேரமும் இரண்டு மணி ஆகிறது. வெளியிலையும் சத்தங்கள் வித்தியாசமாக இருக்கிறது. ஒருக்கா என்றாலும் கண் அயர விடுங்கோவன். அத்துடன் யாவரும் ஒருவருடன் ஒருவர் பேசாது படுத்துவிட்டனர்.

காலை ஆனதும் முருகேசர் பேப்பர் வாங்க கடைக்குக் கிளம்பினார். வழியில் மயில் வாகனத்தைக் கண்டார். என்ன மயிலு பேப்பர் வந்திட்டிதோ என்று வினாவினார். மயில் வாகனம் முருகேசு வீட்டிற்கு பக்கத்து வீடு பிள்ளைகள் யாவரும் வெளிநாட்டிற்கு போய் விட்டனர். ஆஸ்மா வருத்தத்துடன் இருக்கும் மனைவி நாகம்மாவோடு இருக்கின்றார். மயிலருக்கு சலரோகம். மனைவிக்கு ஆஸ்மா. இருவரும் மருத்துவமனைக்கு செல்வதே அவர்களது பிரதான வேலையாக இருந்தது. இவர்களின் உறவினர்களிலும் அநேகமானோர் வெளிநாட்டிற்கு போய் விட்டதனால் உறவு என்று சொல்லிக் கொள்ள மயிலர் குடும்பத்திற்கு யாரும் இல்லை.

என்ன முருகேசு இரவு முழுக்க நந்தனுடன் விவாதம் நடந்து கொண்டிருந்தது. என்ன விசேசம் என்றார். அவன் தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடிறான். நான் என்ன செய்யிறது மயிலர். ஏன் என்ன வேணுமாம் அவனுக்கு என்றார் மயிலர். வெளிநாடு போக மாட்டானாம் உதே விசேசம் சரி சரி முருகேசர் இதைப்பற்றி நானும் உம்முடன் கதைக்க வேண்டும் வாரும் ஓரத்திற்குப் போய்க் கதைப்போம் என்று கூறிய மயிலர் முருகேசருடன் வீதியின் ஓரத்திற்குச் சென்றார்.

முருகேசு நந்தன் சொல்வதிலும் உண்மை உண்டு. இங்கே என்னைப் பாரும். எனக்கு இருக்கிற வருத்தத்தோட நாகம்மாவோட நான் படுகின்ற கஸ்டம், உமக்கு தெரியும் தானே. இப்ப எங்கள்ள ஒருவருக்கு ஒன்று நடந்தால் எங்கட நிலை என்ன ஆகும். எங்க அயல்ல இனசனமென எத்தனை குடும்பங்கள் இருந்தது. இப்போ எல்லாரும் ஓடீட்டினம். ஆங்காங்கே கிழடு கட்டைகள் தான் இருக்குதுகள் கந்தையா குடும்பத்திற்கு நடந்ததைப் பார்த்தனீர் தானே. கந்தையாட மூள சரி இல்லாத பெடியன் கிணற்றுக்குள் விழுந்து செத்திது. கந்தையா பெஞ்சாதி செல் விழுந்த ஏக்கத்தில் செத்திது. இறுதியாக கந்தையா தூக்குப் போட்டு செத்திது.

சரி மயிலு நந்தன் இளம் பெடியன் எங்கட சுயநலத்திற்காக வைத்துக் கொண்டு நாளைக்கு அவன்ட வாழ்க்கையை பாழாக்கக் கூடாது. இப்ப இஞ்ச இருக்கிற நிலையில் அவனுக்கு எந்த நேரம் எது நடக்கும் என்று சொல்ல ஏலாது. முருகேசர் வெளிநாடு போற வசதி இருப்பதால் நாங்கள் இந்த முடிவுக்கு வருகிறோம். ஒரு வசதியும் இல்லாத சனங்கள் இஞ்ச தானே இருக்கிது. ஊரில நடக்கிறதைப் பார்த்தால் நந்தன் சொல்வது சரியாக இருப்பதாகவே எனக்குத் தெரியிது. சரி சரி நீர் போய் பேப்பரை வாங்கும் நான் வருகிறேன் என்று கூறிய மயிலர் நடக்கத் தொடங்கினார். வீட்டிற்கு வந்த முருகேசர் பத்திரிகை படிக்கத் தொடங்கினார். பத்திரிகையிலே முருகேசர் முதலில் பார்ப்பது நீத்தார் பட்டியல். அதாவது மரணம் அடைந்தவர்கள் பகுதி, பெரும்பாலும் குடா நாட்டுப் பத்திரிகைகளில் இப்பகுதியே முக்கிய பகுதியாக இருக்கிறது. தபால்காரனின் மணியோசை கேட்டதும் முருகேசர் பேப்பர் படிப்பதை நிறுத்திவிட்டு, கடிதம் வாங்க போனார். தபால் காரன் நீண்ட கடித உறை ஒன்றை கொடுத்து விட்டுப் போனான். முருகேசர் கடிதத்தைப் வேண்டிப் பார்த்தார். அது கல்வி இலாகாவில் இருந்து நந்தனுக்கு வந்திருந்தது. பார்வதி இவன் நந்தனைக் கூப்பிடு என்றார் முருகேசர். அறையில் நின்ற நந்தன் என்னப்பா என்று ஓடி வந்தான். இந்தா உனக்கொரு கடிதம் வந்திருக்கு. கடிதத்தை உடைத்த நந்தனுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. என்னடா சிரிக்கிறாய் என்ன விசேசம் என்று கேட்டா பார்வதி. அம்மா எனக்கு அப்பாட பள்ளிக்கூடத்தில வாத்தியார் வேலை கிடைச்சிருக்கு என்றான் நந்தன்.

பேப்பர் வாசிப்பதை நிறுத்திய முருகேசர் தான் தனது பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்ற போது நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் தான் பேசியதை நினைவு கூந்தார். அன்புக்குரிய மாணவர்களே ஆசிரியர் தொழில் உலகில் மிக உன்னதமான தொழில் ஆசிரியர் என்பவர் கடவுளுக்கு சமமானவர் இந்தத் தொழிலில் இருந்து நான் ஓய்வு பெறுவதை இட்டு பெருமை கொள்கிறேன். ஆயினும் எனக்கொரு கவலையும் உண்டு. எனக்குப் பின்பு இக்கல்லூரியில் எனது பிள்ளைகளில் ஒருவர் என்றாலும் எனது சேவையை செய்ய வேண்டும் என எண்ணியிருந்தேன். நாட்டின் நிலை அதற்கு அனுமதிக்கவில்லை. இருந்தாலும் என்னிடம் கல்வி கற்ற பலர் இங்கு இளம் ஆசிரியர் ஆக உள்ளனர் அது எனக்குப் பெரும் நிம்மதியாக உள்ளது, என கண்கலங்கிய நிலையில் உரையை முடித்தார்.

முன்னைய சிந்தனையில் இருந்து மீண்ட முருகேசர் நந்தன் ''நீ என்ர சேவைக்குப் போ' எனது குடும்பத்தில் ஒருவர் என்றாலும் அந்த சேவையில் இருப்பது நான் செய்த பாக்கியம். நந்தன் ஓடிப்போய் தந்தையை கட்டித்தழுவினான். தாயார் பார்வதியின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

(9ம் பக்த் தொடர்ச்சி)

## இயமனான மதநம்பிக்கை

உலகின் இராட்சத கம்பனிகளுக்கு உகண்டா அரசு நிலங்களை வழங்கியதால் உகண்டா நாட்டு விவசாய நிலங்கள் பாழாகியுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் இந்த மதத்துரோகிகளின் நடவடிக்கையால் உகண்டா நாடே பிணக்காடாக காட்சி தருகிறது.

இங்ஙனம் கொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளுமாக உள்ளனர். இவர்களின் உடல்கள் தற்போது பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பொறுத்தே எப்படி கொலை செய்திருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். சோசலிய நாடுகளின் உள்விவகாரங்களில் அதிகம் மூக்கை விட்ட மேற்குலக தொடர்பு சாதனங்கள், இவ்விடயங்களில் தமது புலனை செலுத்த தவறியதால் தான் இத்தகைய விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

மதம் என்றால் எதையும் செய்யலாம் என்ற நம்பிக்கை இன்று பல்வேறு நாடுகளில் துளிர் விட்டுள்ளது. இலங்கையில் கூட ஒரு மதத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கும் அளவு கடந்த சுதந்திரம் இந்த நாட்டிலும் பல அனர்த்தங்களை உருவாக்கலாம். அதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



# மட்டக்களப்பு விமானத்தள விஸ்தரிப்பு ஒரு திட்டமிட்ட குடியேற்றமே

இன்று நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பே இனப்பிரச்சினை தோன்றிவிட்டது. ஆனால் தனிநாட்டு கோரிக்கை இன்று உக்கிரம் அடைந்துள்ள ஆயுதப் போராட்டத்திற்கும் அதே அளவு நீண்ட வரலாறு கிடையாது.

இனப்பிரச்சினை உக்கிரமடைவதற்கு அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களும், ஒன்றாகும். சிங்கள பேரினவாதிகளின் ஆக்கிரமிப்புக் கொள்கை 1949ம் ஆண்டில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைமையில் இருந்த டி.எஸ்.சேனநாயக்கவினால் விவசாயப் புரட்சி என்ற பெயரில் கிழக்கு மாகாணத்தில் கல்லோய திட்டம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்கள் இன்றுவரை தொடர்கின்றன. எங்கு அரச காணிகள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் சிங்கள மக்களை குடியமர்த்துவதில் அரசும் அரச படைகளும் சிங்கள அரசியல்வாதிகளும் பிக்குமார்களும் என்றும் இல்லாதவாறு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களின் தாயக பூமியை அபகரிக்கும் உச்ச நிலை 50 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமானது. அதன் பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்க தலைமைகள் அனைத்துமே தமக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் எமது தாயக மண்ணை அபகரிப்பதில் எந்த வேற்றுமையும் கிடையாது.

1950ல் கந்தளாயில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட குடியேற்ற நடவடிக்கை இன்று வரை திருகோணமலையில் தொடருகிறது, அண்மையில் திருகோணமலையை ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார சமூக மேம்பாட்டு நிறுவனம் (UNESCO) சமாதானத்திற்கான நகரமாக அறிவிக்குமாறு எமது அரசை கேட்டதாகவும் தமது அரசு அதனை ஏற்றுக்கொண்டு விட்டதாகவும், இலங்கை அரசு அறிவித்தது. வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தின் தலை நகராக விளங்கும் திருகோணமலையை எப்படி சமாதான நகராக அரசு ஏற்றுக்கொள்ளும். இதற்கு அரசு தரப்பு இங்கு மூவின மக்களும் வாழ்வதால் தெரிவு செய்வதாக காரணம் கூறுகின்றனர். இது முற்றிலும் அரசின் திட்டம் இட்ட செயலாகும். திருகோணமலை இன்று நடக்கும் போரினால் சிதைக்கப்பட்ட தமிழர் தலைநகரமாகும்.

அம்பாறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றம் இன்று வடக்கு கிழக்கு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது.

திருகோணமலை மாவட்டத்தை சிங்கள மயமாக்கிய கையோடு மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியை துண்டித்து அம்பாறை மாவட்டத்தை உருவாக்கினர். அம்பாறை மாவட்டத்தில் பெருவாரியாக இருந்த முஸ்லிம், தமிழ் மக்களை சிறுபான்மையாக்கும் நடவடிக்கையாக பொன்னன்வெளி பிரதேசத்தை பகல் கொள்ளை அடித்து திகவாவி புனித பிரதேசமாக மாற்றி அமைத்தனர். இவ்வாறு அம்பாறை மாவட்டமும் சிங்கள பேரினவாதிகள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகின்றது.

இதே போன்று இன்று மட்டக்களப்பு நகரமும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகிறது. விமான நிலையம் விஸ்தரிப்பு என்ற போர்வையில் 1965ம் ஆண்டு 500 மீற்றர் காணி சுவீகரிக்கப்பட்ட போது கோயில், இடுகாடு, பாடசாலை என்பன சிக்கலுக்கு உள்ளானது. அதன் விளைவு கடந்த ஓரிரு வருடங்களாக பாடசாலை இடம் மாற்றவும் ஆலயத்தை அப்புறப்படுத்தவும் சடலங்களை அடக்கம் செய்ய வேறிடத்தை நாடுமாறு விமான படை தரப்பில் இருந்து பல்வேறு அழுத்தங்கள் ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கடந்த மார்ச் 19ம் திகதி விமானப்படை காவலரன் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தை அடுத்து விமானப்படை அதிகாரிகள் பல்வேறு கட்டளைகளை விதித்தனர்.

புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவிலில் உடனடியாக புகைகள் நிறுத்தப்பட வேண்டும். கோவில் வளாகத்தில் யாரும் நுழையக்கூடாது.

★ ஆலையடிச்சோலை மயானத்தை பொது மக்கள் பயன்படுத்த கூடாது.

★ புது நகர் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் பி.ப.2 மணிக்கு பிறகு மாணவர்கள் செயலக கூட்டம் என கட்டளை விதித்தார். இது ஒரு இனத்தவர் அடிப்படை உரிமைகளை மறுக்கும் நடவடிக்கையும் ஆகும். மேல் காணும் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் புதுநகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையும் விக்னேஸ்வர வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சபையும் விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிக்கப்பட்டோர் சங்கம் ஒன்றிணைந்து நடத்திய போராட்டத்தினால் தற்காலிகமாக தீர்வு கிட்டியது. இருந்தும் இது மக்களிற்கு வெற்றி கிட்டியது என்று கூறமுடியாது. விமான படை அதிகாரிகள் நினைத்ததைப் போல் தீர்மானங்களை எடுக்கலாம். விமான நிலைய விஸ்தரிப்பு என்ற போர்வையில் சுவீகரிக்கப்படும் காணிகள் அபிவிருத்தி என்ற நோக்கில், மேற்கொண்டால் வரவேற்க வேண்டியது தான். ஆனால் யுத்த முனைப்பு என்ற கோணத்தில் இந்த விஸ்தரிப்பு இடம் பெறுவதால் மக்களின் கோணத்தில் இருந்து சகலரும் குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பு பகுதியிலுள்ள மக்களின் இருப்பு நாளுக்கு நாள் அச்சுறுத்தப்பட்டே வருகிறது. ஆலய வழிபாட்டிற்கும் கல்வி மேற்கொள்வதற்கும் இறந்தவர்களை புதைப்பதற்கும் இப்பகுதி மக்கள் போராட வேண்டியுள்ளது. இந்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசின் கதிரைக்குள் அடங்கி இருக்காமல் எமது பாரம்பரிய உரிமைகளுக்கு குரல் கொடுக்க மக்களோடு மக்களாக இணைந்து போராடுவதே ஒரே வழி. பல்வேறு திட்டங்களுடன் எமது தாயக பூமி அபகரித்துக் கொண்டிருக்கும் சிங்கள படை நாளை தமது சிங்கள குடும்பங்களை கொண்டு குடியேற்றலாம். இது போல் எமது திருகோணமலையும் மூவின மக்களும் வாழ்வும் சமாதானம் என பெயர் சூட்டப்பட்டது. நாளை மட்டக்களப்புக்கும் இந்த நிலை ஏற்படலாம்.

# மலையக மக்களின் சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்த சதி

இன்று இலங்கையில் வாழ்கின்ற சமூகங்களில் மலையக மக்களே மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளனர். உண்மையில் அவர்கள் பின்தங்கிய நிலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கும் இம்மக்களை பல்வேறு வழிகளில் மாறி மாறி ஆட்சி செய்த அரசுகள் ஏமாற்றியுள்ளன. இதற்கு மலையக தலைவர்களும் உடந்தையாக இருந்துள்ளனர். மலையக மக்கள் இன்று கல்வி, சுகாதாரம், போக்குவரத்து குடியிருப்பு, வேலைவாய்ப்பு போன்ற அனைத்து துறைகளிலும் பின்தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இலங்கை சனத்தொகையில் 6.5 வீதமாக இருக்கும். இம்மக்களின் அடிப்படை வாழ்வில் கூட அரசாங்கம் கவனம் எடுக்காமல் உள்ளது.

1948ல் நடந்த பொதுத்தேர்தலில் 10க்கு மேற்பட்ட ஆசனங்களை மலையக மக்கள் பிரதிநிதிகள் பிரதிநிதித்துவம் செய்தனர். இதை தடை செய்வதற்காகவே இந்திய, பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டு 10 லட்சத்துக்கு மேற்பட்ட மலையக மக்களின் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து மலையக மக்களின் அடிவயிற்றில் கை வைக்கும் பல நடவடிக்கைகள், இலங்கை அரசுகளால் காலத்துக்குக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. மலையக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது மலையக மக்களின் சனத்தொகையை கட்டுப்படுத்த ஒரு சதி நடந்துள்ளது என்ற செய்தி அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 8 வருடங்களாக இச்சதி முயற்சி நடைபெற்று வந்ததாகவும் தெரிய வந்துள்ளது. மலையகப் பகுதியில் கட்டாய கருத்தடை என்ற பிரச்சாரம் மிகவும் திட்டமிட்ட முறையில் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கருத்தடை செய்யும் ஒருவருக்கு 500/= ரூபா வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கருத்தடை விடயத்தில் ஈடுபடும் தரகருக்கு இதைவிட கூடுதலான பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தின் மிகக் குறைந்த நிலையில் உள்ள கல்வி அறிவை தமக்கு சாதகமாக பாவித்து இந்த அதிகாரிகள் இம் முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளனர். மிகக் குறைந்தளவு வசதிகளைக் கொண்ட 'லயன்' காம்பராக்களில் சீவித்த மக்கள் தமக்கு வசந்தம் வராதா? தென்றால் தீண்டாதா? என எண்ணி வாழ்ந்தனர். ஆனால் அவர்களுக்கு இன்று சனத் தொகையில் பெரு வீழ்ச்சியே ஏற்பட்டு உள்ளது.

இந்த சதி முயற்சியில் ஈடுபட்டவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல, மருத்துவர்களே ஈடுபட்டுள்ளனர். உயிரைக் காப்பாற்ற வேண்டிய மருத்துவர்கள் பரம்பரையையே அழிக்க சதி செய்துள்ளனர்.

இங்கினியாக்கலையில் கருத்தடை செய்யப்பட்ட பெண் ஒருவர் இறந்ததை தொடர்ந்து இச்செய்தி வெளியில் கசியத் தொடங்கியது. இன்று மலையகப் பகுதியில் காணப்படும் குழந்தைகள் காப்பகங்கள் போன்றவற்றில் குழந்தைகளின் வருகை வீழ்ச்சியைக் கண்டுள்ளது. இதனாலேயே இவ்விடயம் அம்பலத்துக்கு வந்தது.

கருத்தடை என்ற பிரச்சாரத்தில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள் ...

பது கட்டாய கருத்தடையை மட்டும் கொண்டிருக்கவில்லை. ஆரோக்கியமாக எப்படி குழந்தை பெறுவது தாய் சேய் எப்படி நலமாக இருப்பது போன்ற விடயங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மலையகப் பகுதியில் கருத்தடை பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்கள் கட்டாய கருத்தடை என்ற விடயத்தையே முழு விடயமாக அம்மக்களுக்கு காட்டியுள்ளனர்.

இன்றுள்ள இனவாத சூழ்நிலையில், மலையக மக்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகிறது. இந்நிலை தொடர்ந்தால் மலையக மக்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டியநிலை ஏற்படும். மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பெருந்தலைவர்கள் மலையகப் பக்கம் போகின்றார்களோ என்றால், அது தான் நடப்பதில்லை. தலைநகரத்தில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விருந்து உபசாரங்களில் கலந்து கொள்வது, பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுப்பதிலுமே அவர்களது காலம் கழிகிறது. கொழும்பில் வாழும் உயர்மட்ட சமூகங்களின் பிரச்சினைகளில் தலையிடுவது தமக்கு கௌரவம் என்றும், இம் மலையகத் தலைவர்கள் எண்ணுகின்றார்கள் போலும்.

மலையக மக்களுக்கு தலைவர்களாக இருக்க வேண்டியவர்கள், லயன்களிலும், மலையக மக்கள், வேலை செய்யும் தொழிற்சாலைகளிலும், நடந்தும், ஓடியும் செயற்படுபவர்களாக இருக்க வேண்டும்.

www.padippakam.com




# புதிய சமதர்மம்

Registered as a news paper in Sri Lanka

வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822


## சதியை முறியடிப்போம்

தற்போது சந்திரிகாவுக்கும், ரணிலுக்கும் இடையேயான பேச்சு வார்த்தையை சதி முயற்சியாகவே கொள்ள வேண்டும். மாகாண சபைக்குரிய அதிகாரங்களை எந்தெந்த வகையில் குறைக்கலாம் என்பதே இவ் இரண்டு பெருந்தலைவர்களின் நோக்காக உள்ளது.

மேல் மாகாண சபை அங்கத்தவர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாறலில், கரு ஜெய சூரியா இதை சூசகமாக தெரிவித்தும் இருக்கிறார்.

போலியான தீர்வு திட்டம் ஒன்றை தமிழ் மக்கள் மீது ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் திணிப்பதே இவர்களின் எண்ணமாகும். தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் கூட இந்த சதி முயற்சியை அடையாளம் கண்டு அவதானமாக செயற்பட வேண்டும். தமிழ் தலைவர்கள் என தம்மை அழைப்பவர்கள் சந்திரிகா ரணில் பேச்சு வார்த்தைக்கு சான்றிதழ் வழங்குவதை நிறுத்த வேண்டும். இந்த பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்கும் என தமிழ் தலைவர்கள் எண்ணினால், அது தற்கொலைக்கு ஒப்பானதாகும். சந்திரிகா ரணில் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களை மறைமுகமாக வெருட்டும், பூச்சாண்டி நடவடிக்கையாகும்.

மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது, அரசுக்கு ஆதரவாக செயற்படுவது போன்ற நிலையே தென்படுகிறது. நாட்டின் முக்கியமான பிரச்சினைகளை பற்றி எதுவும் கூறாமல் முக்கியத்துவம் அற்ற உதிரி பிரச்சினைகளை பெரிது படுத்தி செயற்படுகின்றனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணியினர் என்ன கருத்தை கொண்டிருக்கின்றனர் என்பது மாயமாகவே இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனரா அல்லது உரிமைகள் எதுவும் வழங்கக் கூடாது என்று எண்ணுகின்றனரா, என்ற குழப்பமே மக்கள் மத்தியில் நிலவுகிறது.

சோசலிச சமுதாயத்தில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வரும், என்று கூறி தமிழ் மக்களின் காதில் மக்கள் விடுதலை முன்னணியினர் பூ வைக்க முனைந்தால், அது மக்கள் விடுதலை முன்னணியினரின் அரசியல் அறியாமை என்றே கொள்ள வேண்டும்.

மாமனார் ஜெனரல் ரத்வத்தையை ஓரம் கட்டி விட்டு, சந்திரிகாவே முழு மூச்சுடன் யுத்தத்தை நடத்துகிறார் என்பது வெள்ளிடை மலையாக தெளிவாகியிருக்கிறது. தமிழ் மக்களின் உரிமை போராட்டத்தை சிங்கள பௌத்த பேரின வாத சக்திகள், யுத்தத்தின் மூலம் ஒடுக்குவதற்கே முயல்கின்றன. இதற்காக பேயுடன் கூட கூட்டுச் சேரவும் அவர்கள் தயாராக இருக்கின்றனர்.

## மருத்துவ வசதியின்றி தவிக்கும் மன்னார் மக்கள்

வன்னிக்கு மருத்துவ உதவிகள் என்பது முயல்கொம்பாக உள்ள இக்காலத்தில், மன்னாருக்கான மருத்துவ உதவிகள் கானல் நீராகியுள்ளது. தினமும் 400க்கு மேற்பட்ட நோயாளர்கள் வருகை தரும் இவ்வைத்திய சாலையில் 6 மருத்துவர்களே உள்ளனர். உண்மையில் 25 மருத்துவர்கள் இவ்வைத்தியசாலைக்கு வேண்டும்.

வன்னியில் இருந்து மன்னார் பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் மன்னார் வைத்திய சாலையில் மருத்துவம் செய்யப்படுகிறது. மன்னார் பகுதி பின் தங்கிய பகுதியென அடையாளப்படுத்தப்பட்ட பகுதியாகும். இப்பகுதியில் சேவை செய்ய மருத்துவர்கள் பின் நிற்பதாக தெரியவருகிறது. பெரும்பாலான மருத்துவர்கள் தலைநகரங்களில் கடமைபுரியவே விரும்புகின்றனர். தென் இலங்கையில் கூட பின் தங்கிய பகுதிகளில் மருத்துவர்களுக்கான தட்டுப்பாடுகள் பெரியளவில் நிலவுகிறது. குறிப்பாக மலையகப் பகுதியில் சொல்லத் தேவையில்லை.

இந்நிலையில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் மன்னார் பகுதிக்கு மருத்துவர்களை இலங்கை அரசு அனுப்பிவைக்குமா?

இன்று காலி வீதியால் செல்ல அச்சப்படும் அரச உயர் அதிகாரிகள் மன்னார் தீவுக்கு செல்வார்களா? யுத்தம் என்ற காரணத்தினால் எத்தனையோ விதங்களில் தமிழ் மக்கள் அல்லற் படுகின்றார்கள். அவற்றுள் மருத்துவ

## வீரவிதான இயக்கத்தால் முஸ்லீம்களுக்கு பெரும்பிரச்சினை

### 'மொகமட் றிஸ்வான் பயஸ்' முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி

தற்போது வீரவிதான இயக்கம், முஸ்லீம் மக்களுக்கு எதிராக இனவாத பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகிறது. முஸ்லீம் மக்களுக்கு சிங்கள மக்கள் காணி விற்கக்கூடாது என்றும், கடைகளை வாடகைக்கு கொடுக்கக் கூடாது என்றும், முஸ்லீம்களுக்கு வீடுகளை கூட கொடுக்க வேண்டாம் என்றும் பிரச்சாரம் செய்து வருகின்றனர். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் முஸ்லீம்களுக்கு வீரவிதான இயக்கம் பெரும் அச்சுறுத்தல் கொடுக்கும் சக்தியாக இருக்கிறது,

இன்று தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளில் கூட சிங்கள பொலிசாரே கடமை புரிகின்றனர். இதனால் பொலிஸ் நிலையத்துக்கு ஒரு முறைப்பாடு ஒன்றை செய்வதற்கு கூட சிங்களம் தெரிந்த ஒருவரை தேடிப்பிடிக்க வேண்டியுள்ளது. தமிழ், முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் பகுதிகளில், முப்பது வீதம் என்றாலும், தமிழ் தெரிந்த பொலிசாரை நியமிக்க வேண்டும். இதுவே முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிலைப்பாடாகும். பெரும்பான்மையோரும், சிறுபான்மையோரும் கலந்து வாழும் பகுதிகளில் ஏதும் பிரச்சினைகள் வருகின்ற போது பெரும்பான்மை இனத்தவரைச் சேர்ந்தோரே, பொலிசில் முழுக்க இருப்பதால், பெரும்பான்மையோருக்கு சாதகமாகவே பொலிசாரின் செயற்பாடு அமைகிறது.

வேலை வாய்ப்பு பிரச்சினையில் கூட முஸ்லீம் மக்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை இனங்களான முஸ்லீம்கள், தமிழர்கள் ஆகிய இரண்டு இனங்களும் வேலை வாய்ப்புக்களில் அநீதிக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

கலால் என்ற குறியீட்டை இன்று பல வர்த்தகர்கள் தவறாக பயன்படுத்துகின்றார்கள். இவர்களின் செயல் முஸ்லீம்களின் மனதை புண்படுத்தும் செயலாகும். இதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சொல்லை பாவிப்பதற்கு முஸ்லீம்களின் சமயப் பெரியார்கள் கொண்ட சபையின் அனுமதியைப் பெற வேண்டும் என சட்டம் கொண்டுவரவேண்டும். இதற்கு தனியான ஒரு அலுவலகம் அரசால் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று அரச தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சிறுபான்மையோருக்கான நிகழ்ச்சி குறைவாக இருக்கிறது. குறிப்பாக முஸ்லீம்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் மிக அரிதாகவே காட்டப்படுகிறது. முஸ்லீம்களுக்கு என குறிப்பிட்டளவு நேரம் அரச தொலைக்காட்சியில் ஒதுக்கப்பட வேண்டும். உயர் பாடசாலைகளில், முஸ்லீம் மாணவர் அனுமதிப்பதற்கு மறுப்பு தெரிவிக்கபடுகிறது. இது பெரும் அநீதியாகும். முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளில் பிரபல பாடசாலைகள் இருந்தும், அதில் முஸ்லீம் குழந்தைகள் சேரமுடியாத நிலை உள்ளது. அங்ஙனம் ஒரு சிலரை எடுத்தால் கூட பெருமளவு பணம் செலவழித்தே அந்த அனுமதி பெறமுடிகிறது. இதனால் ஏழை முஸ்லீம்களால் ஒன்றும் செய்ய முடியாது இருக்கிறது.

## எப்பாவெல பொஸ்பேட் சுரங்கமும் ஏலவிற்பனை

நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த எப்பாவெல பொஸ்பேட் சுரங்க பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. பெறுமதி மிக்க இந்த பூமியை உடனடியாக அந்நிய நாட்டுக்கு ஏலத்துக்கு விடும்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பணித்துள்ளார்.

குண்டு வெடிப்பின்பின் அம்மாவின் உத்தரவுகள் மிகவும் காரம் நிறைந்து காணப்படுகின்றது. எவரும் வாய் திறக்கக் கூடாது என்பது போல் அவரின் போக்கு உள்ளது. கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டபோது, உடனடியாக சுரங்கத்தை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். இதற்கு எதிராக லங்கா சமசமாஜக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான பட்டி வீரக்கோன் எதோ கூற முற்பட்டதையும் ஜனாதிபதி கவனத்தில் எடுக்கவில்லை.

சுருக்கமாகக் கூறினால், சிவப்பு வீரர்களும், தமிழ் மண்ணை மீட்கவென ஒரு காலத்தில் போராடியவர்கள் என்று கூறப்படுபவர்களும், இந்த பொஸ்பேட் சுரங்கம் விற்பனைக்கு ஆதரவாகவே இருக்கப் போகிறார்கள். வடக்கு கிழக்கு மண்ணில் ஒரு சிறு அங்குலத்தைகூட விட்டுக் கொடுக்க விரும்பாத பௌத்த பேரின வாதிகளும் இந்த பாதகச் செயலுக்கு துணைபோகப் போகின்றார்கள். தமிழ் மக்களுக்கு சிறு சலுகைகூட கிடைக்கக் கூடாது. ஆனால் இந்த நாட்டு மண்ணை அந்நிய நாடுகளுக்கு மனம் போன போக்கில் விற்பதற்கு முழு அனுமதியும் உண்டு.

நட்டத்தில் இயங்குகின்ற சில நிறுவனங்களை விற்க முயற்சித்தால் அதில் ஏதும் நியாயம் இருக்கிறது என கூறலாம். ஆனால் பெரும் லாபம் ஈட்டும் நிறுவனங்களை ஏன் தனியார் மயமாக்க வேண்டும். அதேபோல் வளம் பொருந்திய இந்த மண்ணை அந்நியருக்கு தாரை வார்ப்பதன் உள்நோக்கம் தான் என்ன?

## மாத்தளையில் தமிழ் பயணிகள் மீது தாக்குதல்

மாத்தளை பகுதியில், இரத்தோட்டையில் இருந்து நடுத்தோட்டத்துக்கு செல்லும் 589ம் இலக்கமுடைய இலங்கை போக்குவரத்துசபைக்கு சொந்தமான பஸ்சில் பயணம் செய்த பிரயாணிகளே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இச்சம்பவம் நிக்லோயா பத்தேக்கர் சந்தியில் நடைபெற்றுள்ளது. பெரும்பான்மை இனவாதிகளால் இப்பகுதி தோட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்களே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இது சம்பந்தமாக இப்பகுதி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காததால் கோபமுற்ற பாதிக்கப்பட்ட மக்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இனவாதிகள் தமிழ் மக்களை தாக்கும் சம்பவங்கள் இன்று அதிகரித்து வருகின்றன.

## ஐரோப்பிய ஒன்றியத்துடன் அமெரிக்கா வர்த்தக சர்ச்சை

அமெரிக்காவிற்கும், ஐரோப்பாவிற்கும், இடையிலான பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பில் தோன்றியுள்ள சர்ச்சைகள் இரு தரப்பிற்கும் இடையேயான உறவுகளை மோசமடையச் செய்யும் என்று எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் பிரதிவர்த்தக அமைச்சர், டேவிட் ஆரோன், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். 1998ஐ விட 1999ல் அதிக பிணக்குகள் தோன்றியிருந்தன. உரிய முறையில் பிணக்குகள் தீர்க்கப்படாமல் போனதால்தான் இந்நிலை தோன்றியது. மேற்படி செய்தியின் மூலம் அமெரிக்க, ஐரோப்பிய யூனியனின் முரண்பாடுகள் தெளிவாகப் புலப்படுகின்றது. அண்மையில் கொழும்பு வந்திருந்த டென்மார்க் பாராளுமன்ற உறுப்பினர் சோறன் சொன்காட் ஆற்றிய உரையொன்றில் தெரிவித்த கருத்துக்களுக்கும், மேற்படி செய்தி உயிர் கொடுத்திருக்கிறது.

படிப்பகம்